சுந்தர ராமாயணம்



41. குரங்கு பிடிப்பதா ?

கிங்கர வதத்திற்குப் பிறகு அனுமன் உன்னதமான உபரிகை ஒன்றை அழித்துத் தன் வலிமையை வெளியிட்டுக் கொண்டதாக ஒரு சர்க்கம் வால்மீகத்தில் காணப்படுகிறது. இது கிங்கர வதத்திற்கும் சம்புமாலி வதத்திற்கும் இடையே வருகிறது.

உபரிகையா ? செய்குன்றமா ?

அனுமன் தன் உருவத்தை வளர விட்டுக்கொண்டு சிங்கநாதம் செய்து அந்த உபரிகையைக் காவல் செய்து கொண்டிருந்த அரக்கர்களோடு போராடியதாகவும், அந்த உபரிகையின் ஒரு பெரிய ஸ்தம்பத்தைச் சுழற்றி இதர ஸ்தம்பங்களின் மீது அடித்து நெருப்பெழச் செய்து அந்தத் தீயினால் உபரிகையை வெந்து போகச் செய்ததாகவும், அப்பால் அந்தக் காவலாளிகளான அரக்கர்களை நாசம் செய்துவிட்டு எச்சரிக்கை - ஆரவாரம் செய்ததாகவும் இந்த சர்க்கம் தெரிவிக்கிறது. கம்ப ராமாயணத்திலோ இப்படி ஒரு வரலாறு காணப்படவில்லை.

அசோக வன நாசத்திற்குப் பிறகு கிங்கரர் வதைக்கு முன்பே செய்குன்றம் ஒன்றைப் பெயர்த்து அனுமன் வீசிச் சில இலங்கை மாடங்களை இடித்துவிட்டதாகக் கம்பன் கூறியிருக்கிறானல்லவா? அந்தச் செய்குன்றத்தை அரக்கர் காத்து வந்ததாக ராவணன் வாக்கிலிருந்து தெரிய வருகிறது.

வால்மீகத்தில் சம்புமாலி

சம்புமாலியை வால்மீகி ராவணனுக்கு முக்கிய மந்திரியான பிரகஸ்தனுடைய புதல்வனாகக் கூறியுள்ளார். கம்ப ராமாயணத்திலோ இந்த உறவு கூறப்பட வில்லை.

வால்மீகியின் சம்புமாலி குண்டலங்களையும் ஆரங்களையும் சிவந்த ஆடைகளையும் மாலைகளையும் அணிந்து கொண்டு மலைபோல் நடந்து கழுதைகள் பூட்டிய இரதத்தில் ஏறிக் கொண்டு வந்தான், அனுமனை நோக்கி. வாசற்படி மேலிருந்த வானர வீரனின் சிவந்த முகம் சம்புமாலியின் பாணங்களால் அடிபட்டு மேலும் சிவந்து காணப்பட்டது. உடனே அனுமன் சினங்கொண்டு ஒரு பெரிய பாறையைப் பெயர்த்து எறிய, அதைச் சம்புமாலி பாணங்களால் உடைத்தெறிந்தான். அனுமன் கையால் தூக்கிச் சுழற்றிய ஆச்சாமரமும் துண்டிக்கப்பட்டது. உடம்பெங்கும் அம்புகள் தைக்கவே, அனுமன் கடுங் கோபத்துடன் இருப்புலக்கையைச் சுழற்றிச் சம்புமாலி மார்பின்மீது எறிந்து அவனைக் கொன்று விட்டான்.

சம்புமாலி வதத்தைப் பற்றிய கதை கூட எவ்வளவு தூரம் மாறுபட்டிருக்கிறது கம்பன் வாக்கிலே! இப்படியெல்லாமிருந்தும் கம்பனை வால்மீகத்தின் மொழிபெயர்ப்பு என்றோ, தழுவல் என்றோ கூறியுள்ள, இன்னும் கூறிக் கொண்டிருக்கும், பண்டிதர்களின் துணிவை என்னென்பது?

சம்புமாலி வதம் கூறும் வால்மீகி ஸர்க்கத்தின் இறுதிப் பகுதியில், கிங்கரர்களும் சம்புமாலியும் நாசமடைந்ததைக் கேட்டு ராவணன் கண் சிவந்து தன் மந்திரி புதல்வர்களை நோக்கி, 'அந்தத் துஷ்டக் குரங்கைப் பிடித்து வாருங்கள்' என்று கட்டளையிட்டதாக வருகிறது. இதைத் தான் எப்படி மாற்றியிருக்கிறான் கம்பன்!

சம்புமாலி வதமானதும் மீண்டும் சாவோலை கொண்டு புறப்படுகிறார்கள் காவல்–தேவர்கள். அவர்களுக்குத் தான் இப்போது வேறு வேலை இல்லையே, சோலை அழிந்து போய் விட்டதால்!

முன் போல் செய்தி சொல்லச் சபா மண்டபத்திற்கு வரவில்லை. 'அங்கே, அன்னியர்களும் கூடும் அந்த இடத்திலே தெரிவிக்கக் கூடிய விஷயமல்ல இது' என்பதை இதற்குள் பாடமாய்ப் படித்துக் கொண்டார்கள்.

எனவே இரகசியமாகச் சக்கரவர்த்தியின் காதில் ஓத வேண்டியது இது என்று அரண்மனைக்குள்ளே போகிறார்கள். இந்த நீண்ட பெரிய அரண்மனையிலே பகுதி பகுதியாய் மண்டபம் மண்டபமாய்க் கடந்து இவர்கள் போவதைப் பாட்டின் சப்தஜாலமே அறிவிக்கிறது.

புக்கார் அமரர்
  பொலந்தார் அரக்கன்
  பொருவில் பெருங்கோயில்

என்ற இப் பாட்டின் இம் முதலடியை ஓதி ஓதிப் பாருங்கள், பொருளைக் கவனிக்காமலே.

உள்ளே போகப் போக இவர்கள் படும் பாட்டைத் தான் பாருங்கள்! சபையிலாவது கூட்டத்திலே ஏதேதோ சொல்லித் தீர்த்து விட்டார்கள். இப்போது சிங்கத்தின் குகைக்குள் போவது போலத் தோன்றுகிறது. தனியாயிருந்த அந்த லோக பயங்கரனைப் பார்த்ததும் பயம் எவ்வளவோ அதிகப்படுகிறது!

தொண்டை விக்கிக் கொள்ளுகிறது, பேச்சு வரவில்லை; அழுகைதான் வருகிறது. ராவணனுக்கோ சிரிப்பு வந்து விடுகிறது. ஆஹா, இரக்கம் தெரியாத அந்த ராட்சஸச் சிரிப்பை அதோ பாருங்கள்!

அந்த ராணுவ தோரணையையும், இந்தத் தேவர்களின் நடுக்கத்தையும், வந்த காரியத்தைப் பரிதாபமாகச் சொல்லத் தொடங்கித் துடுக்காக முடிக்க நேர்ந்த அசட்டுத்தனத்தையும் பாருங்கள், கேளுங்கள்:

புக்கார் அமரர்
  பொலந்தார் அரக்கன்
  பொருவில் பெருங்கோயில்,
விக்கா நின்றார்,
  விளம்பல் ஆற்றார்,
  வெருவி விம்முவார்;
நக்கான் அரக்கன்,
  'நடுங்கல்' என்றான்,
  'ஐயா! நமரெல்லாம்
உக்கார்; சம்பு
  மாலி உலந்தான்;
  ஒன்றேகுரங்(கு)!' என்றார்.

[புக்கார் – புகுந்தார். அமரர்–தேவர்கள். பொலந்தார் – பொன்மாலை. பொருவில் – ஒப்பற்ற. பெருங்கோயில் – (இங்கே) பெரிய அரண்மனை. விக்கா நின்றார் – விக்கிக் கொண்டு நின்றார்கள். விளம்பல் ஆற்றார் – பேச முடியாதவர்களாய். வெருவி – பயந்து. நக்கான் – சிரித்தான். நடுங்கல் – நடுங்காமல் நில்லுங்கள். நமர் – நம்மவர்; நம்முடைய பந்துக்கள். உக்கார் – செத்தார். உலந்தான் – அழிந்தான்.]

சிரித்துக் கொண்டே ராவணன் நடுக்கத்தால் ஆடிக் கொண்டிருந்த தேவரை நோக்குகிறான். 'நடுங்காதே! நேரே நில்லு' என்று ராணுவ தோரணையில்



எழுகின்றது ஒரு கொக்கரிப்பு. இது நடுக்கத்தை அதிகப்படுத்துகிறது.

எப்படியாவது செய்தி சொல்லி விட்டுத் தலை தப்பினாலே தம்பிரான் கருணை தானென்று ஓடப் பார்க்கிறார்கள். இவர்கள் சொல்லும் செய்தி தான் என்ன?

'ஐயா! நம்மவர்களெல்லாம் செத்துப் போனார்கள்; சம்புமாலி கூடச் செத்துப் போய்விட்டார், ஐயா!' என்று



உருகிப் போகும் இந்த அடிமைகளுக்கு, அரக்கர்கள் எப்போது உறவினர் ஆனார்களோ! செத்த பிணங்களோடு 'சாகாப் பிணங்கள்' உறவாடும் மர்மம் தான் என்ன? இதோ தேவர்கள் ராவணன் மகனான அட்சன் இறந்ததும்,

உள்ளம்தான் கள்வெறி
கொள்ளுதடி!

என்று பாரதி சொன்ன மாதிரி உள்ளுக்குள்ளே களிப்புக் கொள்ளப் போகிறார்கள்!

தாங்கள் சொன்ன செய்திக்கு ஒரு கொடுக்கும் வைத்து விடுகிறார்கள்,

ஒன்றே குரங்கு!

என்பதாக. குரங்கிற்கு உதவிப்படை ஒன்றும் வந்து குதித்து விட வில்லை என்பதையுமா சொல்லித் தொலைக்க வேணும்?

இது கேட்ட ராவணனுக்குக் கோபம் வந்ததென்று சொல்லவா வேணும்? ஆனால் அந்தக் கோபத்தைக் கம்பன் தானே சொல்லவேணும்? சொல்லட்

டும்; சொல்லி, மேல் நடந்ததையும் சொல்லக் கேட்போம்:

என்னும் அளவின்,
எரிந்து விங்கி
எழுந்த வெகுளியான்,
உன்ன உன்ன
உதிரக் குமிழி
விழியூ(டு) உமிழ்கின்றான்,
சொன்ன குரங்கை
யானே பிடிப்பன்,
கடிது தொடர்ந்(து)' என்ற,
அன்ன(து) உணர்ந்த
சேனைத் தலைவர்
ஐவர் அறிவித்தார்.

[என்னும் அளவின்-(ஒன்றே குரங்கு) என்றெல்லாம் தேவர்கள் செய்தி தெரிவித்தபோது. வெகுளியான் – கோபத்தையுடைய ராவணன். உன்ன உன்ன (நடந்ததை) நினைக்க நினைக்க. உதிரம்–இரத்தம். விழியூடு – விழிகளின் வழியாக. கடிது – விரைவாக. அன்னது – அது. தலைவர் ஐவர் - பஞ்ச சேனாபதிகள்.]

திரிலோக சக்கரவர்த்தியான லங்கேச்வரன் போய்க் குரங்கு பிடிப்பதா? 'நாங்களே குரங்கைப் பிடித்து வருவோம்' என்று மன்றாடுகிறார்கள் சேனைத் தலைவர் ஐவரும். இத்தோற்றுவாயுடன் வருகிறது 'பஞ்ச சேனாபதிகள் வதைப் படலம்.'

ஏழு மந்திரி குமாரர்கள்

வால்மீகத்திலோ சம்புமாலி வதத்திற்கும் பஞ்ச சேனாபதிகள் வதத்திற்கும் இடையே மந்திரி குமாரர்களின் வதம் வருகிறது. ஏழு மந்திரி புதல்வர்களும் ராவணன் ஏவக் கணக்கில்லாத வீரர்களால் சூழப்பட்டுப் புறப்பட்டார்கள், சுலபமாய் வெல்வோம் என்ற குதூகலத்துடன்.

இந்த வில்லாளிகளுடன் அனுமன் விளையாட்டாகப் போர் செய்யத் தொடங்கினான். அவர்கள் அனுமன் மீது அம்பு மழை பொழிந்தனர். மழைத்தாரைகளால் மறைக்கப்படும் மகா பர்வதம்போல் மறைந்து விட்ட அனுமன் திடீரென்று பயங்கரமாய் ஒரு சப்தமிட்டு அதிவேகமாய் அரக்கர்களுக்கு நடுவிலே பாய்ந்தான்.

அறைந்தான்; உதைத்தான்; குத்தினான்; இடித்தான்; மோதினான். மந்திரி புதல்வர்கள் மாண்டு விழுந்தார்கள். இவர்களுடைய சேனை மூலைக்கு மூலை ஓடிப்போய் விட்டது.

'சரி; இன்னும் பலசாலிகள் இருந்தால் இன்னும் ஒரு கை பார்ப்போம்' என்று வாசற்படியில் வீற்றிருந்தான் அனுமன். இது தெரிந்த ராவணன் ஐந்து சேனாபதிகளை அழைத்து அனுமனைப் பிடித்து வரும்படி உத்தரவு செய்கிறான்.

வால்மீகத்தில் ஐவர்

இனி, கம்ப ராமாயணத்தில் 'பஞ்ச சேனாபதிகள் வதை' பார்ப்பதற்கு முன்பே வால்மீகத்தில் பார்த்து விடுவோம். ராவணன் அனுமனை இப்போது சாமானியக் குரங்கென்று நினைக்கவில்லை.

'சேனாபதிகளே! கணக்கில்லாத சேனைகளுடன் செல்லுங்கள். இந்திரனோ வேறு யாரோ கடுந்தவத்தால் இந்தப் பெரிய பிராணியைப் படைத்து விட்டிருக்கிறார்கள் எனத் தோன்றுகிறது. நம்மால் ஏற்கெனவே பல தடவை வெல்லப்பட்டவர்கள் நமக்கு ஏதாவது கெடுதி செய்வதிலும் வியப்பில்லையே? ஆகையால் எப்படியாவது குரங்கைப் பிடித்து வாருங்கள்' என்று ஆணை தந்தான் ராவணன்.

சேனாபதிகள் சேனைகளோடு அதிவேகமாய்க் கிளம்பி அனுமன் மேல் பாய்ந்தார்கள். ஒரு சேனாபதி பாணங்களால் அனுமனுடைய தலையில் அடித்தான். அனுமன் தன் உருவத்தை ஓங்கச் செய்து கொண்டு இந்தச் சேனாபதியைப் பிணமாக்கி விட்டான். வேறு இரண்டு சேனாபதிகள் அனுமன் மேல் பாய்ந்தார்கள். ஓர் ஆச்சா மரத்தால் அனுமன் அவர்களை அடித்துக் கொன்றான்.

பாக்கியுள்ள மந்திரிகள் இருவரில் ஒருவன் பட்டாக் கத்தியுடனும், மற்றவன் சூலாயுதத்துடனும் அனுமனை எதிர்த்துக் காயப்படுத்தினர். அனுமன் ஒரு பர்வத சிகரத்தை அலட்சியமாய்ப் பெயர்த்து இந்த அரக்கர்களை அடித்துக் கொன்று விட்டான்.

பிறகு குதிரைகளால் குதிரைகளையும் யானைகளால் யானைகளையும், தேர்களால் தேர்களையும் நாசம் செய்தான். அப்பால் வானர சிரேஷ்டன் பிரளய கால யமனைப் போலத் தோற்றமளித்த வண்ணம் மறுபடியும் அந்த வாசற்படி மீது உட்கார்ந்து சற்று இளைப்பாறிக் கொண்டிருந்தான்.

சுந்தர ராமாயணம்



42. கொலைகளைச் சிரிக்கும் கொலையர்

'சைவ சுத்த போஜனமும் சாதுரியப் பார்வைகளும்' என்று பாரதியார் வருணித்திருக்கிறாரல்லவா நமது வானர சகோதரர்களை? 'அப்படி ஒன்றும் சுத்த சைவம் பிடித்து விடவில்லை வால் நரர்!' என்று சித்தாந்தஞ் செய்து விட்டது போல் பேசுகிறார்கள் பஞ்ச சேனாபதிகள்.

ஐவர் பேச்சு

மரக் கறிக்காரனை நோக்கி ஊனுணவு கொள்வோன், 'அட, கத்தரிக்காயுடன் அந்தப் புழுவையும் சாப்பிடுகிறவன் தானே நீ!' என்று கேட்டது போல, இந்த நர மாமிச பட்சிணிகள் அநுமனைச் 'சிலந்தி உண்பதோர் குரங்கு' என்று குறிப்பிடுகிறார்கள்.

இலை காய்களைச் சாப்பிடும்போது அந்தச் செடி கொடி மரங்களில் நூல் நூற்று வலை பின்னியிருக்கும் சிலந்தியும் குரங்கால் உண்ணப்படுகிறது என்பது குறிப்பு.

இத்தகைய அற்பக் குரங்கின் மேல் ராவணன் சண்டைக்குப் போவதென்றால், கருடன் கொசு மீது படையெடுப்பது போலத் தானிருக்கும் என்கிறார்கள் சேனாபதிகள். இந்தப் படையெடுப்பின் விளைவுதான் என்ன?

'உன் தோளை நினைத்து நினைத்து அல்லும் பகலும் குலுங்கிக் கொண்டிருக்கிறதே அந்தக் கயிலையங்கிரி, இனிமேல் அப்படிச் செய்யுமா?' என்கிறார்கள்:

அலங்கல் மாலைநின்
புயம்நினைந்(து) அல்லும்நன்
பகலும்
குலுங்கும் வன்றுயர்
நீங்குமால் வெள்ளியங்
குன்றம்!

[அலங்கல் மாலை நின் புயம் — அசைந்தாடுகின்ற வெற்றி மாலையோடு கூடிய உன்னுடைய வீரத் தோள்களை. அல்லும் நன் பகலும் — இரவும் பகலுமாக. வல் துயர் — பெருந்துயரம். நீங்குமால் — நீங்கும். வெள்ளியங்குன்றம் — வெள்ளி மலையாகிய கயிலை.]

ராவணேச்வரன் குரங்கின்மேல் படையெடுக்கும் போது மும்மூர்த்திகளின் முகங்களிலும் பரிகாசப் புன்னகை தோன்றுமே என்றும் தெரிவிக்கிறார்கள். 'முறுவல் பூக்குமன்றே நின்ற மூவர்க்கும் முகங்கள்!' என்றால், அந்தச் சிறுமை குறித்து ராவணன் எவ்வளவோ வெட்கப்பட வேண்டியது தானே?

'அன்றியும், அரசே! உனக்கு ஆளின்மை தோன்றுமே!' என்றும் வருந்துகிறார்கள். 'ஏற்கெனவே ஏவப்பட்டவர்களின் கதியை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையோ?' என்று ராவணன் ஒரு வேளை கேட்டுவிட்டால் என் செய்வது? அதற்கும் முன் ஜாக்கிரதையாக, 'செத்துப்போன அவர்களை யெல்லாம் ஆள் வரிசையில் வைத்து எண்ணக் கூடாது; அவர்கள் மெல்லியோர்!' என்கிறார்கள்.

இப்படி யெல்லாம் சொல்லி நிலைமையை விளங்க வைத்துவிட்டுப் பஞ்ச சேனாபதிகள் கை தொழுது இறைஞ்சவே, அரக்கர்கோனும் இசைகின்றான். இந்த ஆசாமிகள் ராணுவ மகாராஜ்யமாகிய ராவண ஸாம்ராஜ்யத்திலே முதன்மையான ஸ்தானம் வகிப்பவர்கள்.



இவர்கள் ஆற்றல்

உலகம் முழுதும் ராவண மகாராஜ்யம் என்று சொன்னால் தான் போதுமா? மூன்று லோகங்களும் குடிமையும் அடிமையும் செய்யும் கொற்றவனல்லவா ராவணேச்வரன்?

இந்தச் சேனாபதிகள் நெற்றியிலே வட்டப் பொட்டு அணிந்திருந்தார்களாம். அந்தத் திலகம் தரையில் படும்படி சக்கரவர்த்தியைச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி வெளிப்பட்டுப் போகிறார்கள்:

உலகம் மூன்றிற்கும்
முதன்மைபெற் றோர்என
உயர்ந்தார்,

திலகம் மண்ணுற
வணங்கினர், கோயிலின்
தீர்ந்தார்.

[திலகம் – நெற்றியில் அணிந்து கொள்ளும் வட்டப் பொட்டு. மண்ணுற – தரையில் படும்படி. கோயிலின் தீர்ந்தார் – அரண்மனையிலிருந்து வெளிப்பட்டார்கள்.]

கரி பரி தேர் காலாள் என்ற நால் வகைப் படைகளையும் விரைவில் திரட்டிக் கொண்டு போர்ப் பறை முழங்க ஐவரும் புறப்பட்டுப் போகிறார்கள். இவர்களுடைய பேராற்றலை என்னென்பது?

இவர்கள் தங்களை மயில் – பீலிகளாலும் அன்னச் சிறகுகளாலும் அணி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தோகையை எந்த மயிலிடமிருந்து பறித்துக் கொண்டார்கள் இவர்கள்?

'மயில் – வாசியில் ஏறும் உல்லாஸன்' என்று பக்தர்கள் பாடிப் புகழ்கிறார்களே, அந்த முருகக் கடவுளின் மயிலிடம் பறித்தது இத் தோகை என்கிறான் கவிஞன். அன்னத்தின் இறகோ பிரம்ம தேவனுடைய வாகனத்திலிருந்தே பறித்துக் கொள்ளப்பட்டதாம்.

இன்னும் கொஞ்சம் பார்க்கலாம், இந்த ஐவரின் அபார ஆற்றல்களையும். குபேர பட்டணம் கொள்ளை போயிற்றாம் ஒரு காலத்திலே. ராவணன் திக்விஜயம் செய்த காலத்திலே தான். அந்த நிதிப் பெருங் கிழவனை நெருக்கி வென்றான் அரக்கர் கோன். அவனுடைய நகரத்தைப் பிடித்துக் கொண்டான். செல்வங்களை யெல்லாம் கைவிட்டு முதுகு காட்டி ஓடினான் குபேரன். அப்போது அங்கே ஆபரணங்களை மூட்டை மூட்டையாகக் கொள்ளையடித்துக் கொண்டு போனார்களாம் ஐந்து ஆசாமிகள்.

அந்த ஐவரே இந்த ஐவரும் என்கிறான் கவிஞன். அந்த ஆபரணங்களில் தேர்ந்தெடுத்த சிலவற்றையே இவர்கள் இன்றும் பூண்டு கொண்டு அனுமன் மேல் படையெடுத்துப் போகிறார்களாம்:

பொதியொடும் வாரிய
பொலங்கொள் பூணினார்.

[பொதி யொடும் – மூட்டை மூட்டையாக. பொலங் கொள் – அழகு வாய்ந்த.]

இன்னும் கேளுங்கள் இவர்களுடைய வீரப்பிரதாப சரித்திரத்தை. ராவணேச்வரன் தேவலோகத்தில் படையெடுத்துச் சென்றான். தேவேந்திரன் எதிர்த்து நிற்க முடியாமல் புறங் கொடுத்து



பக்தியும் தோற்றமும்

இத்தகைய வீர பராக்கிரமச் செயல்கள் ஒரு புறம் இருக்கட்டும்; இவர்களுடைய ராஜபக்திதான் கொஞ்சமோ? ஒரு சமயம் யமராஜா பட்ட பாடே போதாதா?

'பிரம்மதேவன் தானே சிருஷ்டி கர்த்தா? அவன் தானே நமக்கு எஜமான்?' என்று நினைத்து விட்டானும் காலன், ஏதோ கெட்ட காலத்தின் பயனுக. பிரம்ம லோகத்திலும் ராவணன் கொடி தானே பறக்கிறது என்பதை அந்தச் சமயம் மறந்து விட்டானும்.

இப்படி யெல்லாம் காலன் உண்மையாகவே எண்ணினுனே, என்னவோ? உலக வதந்தி ஒன்று—ஏதோ பரதேசித் தபால் – அப்படி வந்ததாம்.

இந்த நினைப்பே ராஜத்துரோகம் என்று ராவணனுக்குக் கோபம் பிறந்தது. அதை அவன் வெளியில் சொல்லவும் இல்லை. எனினும் அந்தக் கோபத்தை எப்படியோ மோப்பம் பிடித்து விட்டார்களாம் பஞ்ச சேனுபதிகள்.

பிறகு என்ன நடந்தது? யமன் முன்னே போய்க் குதித்து விட்டார்கள். இனி அந்த யமனைத் தண்டிக்க வேண்டியது தானே,—எப்படி?

ஒரு கணம் ஆலோசனை, எப்படித் தான் தண்டிப்பது என்று. 'உன் பெயர் என்ன?' என்று கேட்டார்கள். 'அவரவர் காலம் முடிந்தது என்று தெரிந்த பின்புதான் உயிரைக் கவர்ந்து வருகிறேன் நான். காலம் பார்த்துத் தொண்டு செய்வதால் காலன் என்று பெயர்' என்றுன் அவன்.

'காலன்' என்ற பெயரைக் கேட்டதும், கொடுக்க வேண்டிய தண்டனையும் நிச்சயமாகி விட்டது. காலில் கட்டினுர்கள் காலனை. கோபம்தணிந்த

ஓடப் பார்த்தான். ஐராவத யானையைத் திருப்பிக் கொண்டு முடுகிப் போக முயன்றுன். அந்த யானைக்கும் பயம் தான்; ஓட ஆசை தான். ஆனுல் அது அசையாத மலை போல், அப்படியே கற்சிலைபோல், நின்று விட்டதாம்.

காரணம் என்ன? இந்த ஐவரின் கைத் திறனைத்தான் அங்கும் பார்க்க நேர்ந்தது:

இந்திரன் இசைஇழந்(து)
ஏகுவான், இகல்–
தந்திமுன் கடாவினன்
முடுகத், தாம்அதன்
மந்தர வாலதி
பிடித்து, 'வல்லையேல்
உந்துதி நீ'என
வலிந்த ஊற்றத்தார்.

[இசை இழந்து ஏகுவான் – தேவ ராஜா என்ற தன் புகழை யெல்லாம் இழந்து முதுகு காட்டிப் போவதற்காக. இகல் தந்தி – வலிமையுள்ள தன் ஐராவத யானையை. கடாவினன் முடுக – விரைந்து போகுமாறு செலுத்தினுன். மந்தர வாலதி – மந்தர பர்வதம் போன்ற வால். வல்லையேல் – நீ வன்மையுள்ளவனுனுல். உந்துதி – செலுத்திக் கொண்டு போவாய். ஊற்றத்தார் – ஊன்றிய வலிமை வாய்ந்தவர்கள்.]

பாடில்லை. கைகளையும் கட்டி ராவணன் காலில் கொண்டு வந்து தொப்பென்று போட்டு விட்டார்கள்.

இப்படி ஒரு நாடகக் காட்சியை இந்தப் பஞ்ச சேனாபதிகளின் பழைய வீரப் பிரதாப வரலாற்றிலிருந்து தேர்ந்தெடுத்துக் காட்டுகிறான் கவிஞன் :

"பால்நிறத்(து) அந்தணன்
பணிய னாகி,நின்
கோல்நினைத் திலன் !" என
உலகம் கூறலும்,
நீல்நிறத்(து) இராவணன்
முனிவு நீக்குவான்,
காலனைக் காலினில்
கையில் கட்டினார் !

[அந்தணன் – பிரமன். பணியன் – பணி அல்லது கட்டளையின்படி நடப்பவன். நீல்நிறம் – (இங்கே) கருநிறம். முனிவு – கோபம்.]

காலம் சென்ற அரசியல் அறிஞர் திரு சத்தியமூர்த்தி தமது தேசிய ஆவேசச் சொற்பொழிவுகளினிடையே, 'அவன் தோல் வெளுப்பாம்; என் தோல் கறுப்பாம்' என்று ஒரு பல்லவி 'பாடி' 'வெள்ளை' அரசாங்கத்தின் பட்சபாதச் செயல்களைப் பரிகாசத்திற்கு இலக்காக்கியதுண்டு, இந்தச் சுதந்திரத்திற்கு முற்பட்ட யுகத்திலே. அந்த மாதிரி அமைந்திருக்கிறது இப்பாட்டின் உயிர் நாடியான கருத்தும்.

'பிரம்மதேவன் தானே சிருஷ்டி கர்த்தா' என்று கூடக் காலன் நினைத்துப் பணியாளாக வில்லையாம். சிருஷ்டி கர்த்தாவைக் காட்டிலும் நாசகர்த்தாவுக்குத் தானே அஞ்ச வேண்டும்?

'அவன் பால் நிறம்; இந்த ராவணனோ கரு நிறம்!' என்று நினைத்தே தன் ராஜ பக்தியைக் காலன் ராவணனுக்குச் செலுத்த வில்லையாம். அதற்காகப் புத்தி புகட்ட,

காலனைக் காலினில்
கையில் கட்டினார்.

என்பது குறிப்பு.

இப்படி யெல்லாம் செய்யக் கூடிய லோக பயங்கரர்கள் இந்தப் பஞ்ச சேனாபதிகள் என்பதற்கு இவர்கள் தோற்றமே சான்று :

மலைகளை நகுந்தட
மார்பர், மால்கடல்
அலைகளை நகுநெடுந்
தோளர், அந்தகன்
கொலைகளை நகுநெடுங்
கொலையர், கொல்லனூ(து)
உலைகளை நகும்அனல்
உமிழும் கண்ணினர் !

[நகும் – அவமதிக்கும் ; சிரிக்கும். தடமார்பர் – பரந்த மார்பையுடையவர். மால் – பெரிய. அந்தகன் – யமன்.]

இந்தப் பாட்டைப் பாடிக் கொண்டிருந்தாலே பார்த்து விடலாம் பஞ்ச சேனாபதிகளை. அந்த மார்பையும், நெடுந் தோள்களையும் பார்த்தே, 'இந்த ஆசாமிகள் காலனையும் கட்டக் கூடியவர்கள்' என்று தெரிந்து கொள்கிறோம்.

இப்பேர்ப்பட்ட தோள்களும் மார்புகளும் செய்யும் கொலைகளோ காலன் கொலைகளையும் பார்த்துச் சிரிக்குமாம், 'இவ்வளவு தானா?' என்று. அந்தக் கொலை வெறி அவ்வளவும் அப்படியே அந்த முகங்களில் குதி கொள்ளுகிறது.

அந்த முகங்களிலே, கொல்லனுடைய உலைக்களங்களைப் போல் ஜிவ்வென்று ஜொலிக்கின்றனவே, அந்தக் கண்களைத் தான் பாருங்கள். மகாகவிகளின் கண்களிலே கவிதை மிதப்பது போல மிதக்கின்றது கொலைக்குறி, கொலை வெறி, இவர்களது ஒரே கொலைச் சரிதம், இந்த அனல் உமிழும் கண்களிலே.

இத்தகைய பஞ்ச சேனாபதிகள் தோரணத்தின் மேல் கூனிக் கொலுவிருந்த அனுமனை நோக்குகிறார்கள், 'இந்த அற்பக் குரங்கா அரக்கரைத் திருகித் தின்றது?' என்ற அவநம்பிக்கையுடன். தேவர்களுக்கோ பயமும் கூட!– அனுமன் மேல் அவ நம்பிக்கை மட்டுமில்லையாம்.

இந்த அரக்கர்களின் ஆற்றலையும் அளவில்லாத சேனைப் பெருக்கையும் செருக்கையும், அனுமனது தனிமையையும் பளிச்சென நோக்குகிறார்கள் இந்திராதி தேவர்கள் வானவீதியிலே. இரங்குகிறார்கள்; அழுகிறார்கள்; நடுங்குகிறார்கள்.

ஆனால் அனுமனின் அமைதி தான் என்ன !

ஐயனும் அவர்நிலை
அமைய நோக்கினான்.

[அவர் நிலை - அரக்கர்களின் வீரப் பெருக்கும் செருக்குமாகிய நிலையை.]

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

43. ஐவரும் ஒருவனும்

அரக்கர் பெருஞ் சேனைக்கிடையே தன்னந் தனியனாக அகப்பட்டுக் கொண்டானல்லவா அனுமன்? இது குறித்து விண்ணவர்களுக்குத் துன்பமும் அச்சமும் ஏற்பட, இந்த அரக்கர் நிலை தான் என்ன?

நகைச் சுவையுடன் தொடங்கும் போர்

சிறிய வடிவத்திலே தான் இருக்கிறான் அனுமன் இப்போது, தெய்வங் கொடுத்த திருவாலைச் சுருட்டி வைத்துக் கொண்டு. எண்ணிறந்த கண்கள் காண்கின்றன,

புன்றலைக் குரங்கிது!

[புல்தலை – சிறிய தலை.]

என்று.

'இந்தச் சிறிய குரங்கின் தலைதான் எவ்வளவு சிறிது!' என்று பார்க்கின்ற அந்த அலட்சியப் பார்வையின் பொருள் தான் என்ன? இந்தத் தலைக்குள்ளே யிருக்கும் மூளை இன்னும் சிறிதாக இருக்க வேண்டுமல்லவா?

இந்த அற்பக் குரங்கு ஒன்றே மிகப் பல அரக்கர்களையும் கொன்று தீர்த்திருக்க முடியுமா? இந்தச் சந்தேகமும் அந்த அலட்சிய ராட்சஸப் பார்வையில் இடம் பெறுகின்றது.

'புன்றலைக் குரங்கிது
போலு மால்அமர்
வென்றது! விண்ணவர்
புகழை வேரொடும்
தின்றவல் அரக்கரைத்
திருகித் தின்றதால்!'
என்றனர் அயிர்த்தனர்
நிருதர் எண்ணிலார்.

[போலுமால்-போலும். அமர்-போர். வென்றது-வென்றதே. திருகித் தின்றதால்-முறித்து அழித்தது. அயிர்த்தனர்-ஐயம் கொண்டனர்.]

தேவர்கள் துன்பமும் அச்சமும் அடைய, அரக்கர்கள் அலட்சியத்தோடு ஐயுற்று நோக்க, அனுமன் என்ன செய்யப் போகிறான்? அந்தத் தோரண வாசலின் மேலிருந்தபடியே பெரு வடிவு கொள்ளுகிறான்.

வீங்கிய வீரனை
வியந்து நோக்கிய
தீங்கியல் அரக்கரும்
திருகி னார்சினம்,
வாங்கிய சிலையினர்
வழங்கி னார்படை;
எங்கிய சங்கினம்;
இடித்த பேரியே.

[தீங்கு இயல் – தீங்கு செய்வதையே இயல்பாகக் கொண்ட. சினம் திருகினார் – சினம் மிகுந்தவர்களாய். வாங்கிய சிலையினர் – வில்லை வளைத்தவராகி. வழங்கினார் படை – ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். எங்கிய – ஒலித்தன. சங்கினம் – சங்குகளின் கூட்டம். இடித்த பேரியே – முரசுகள் பெரு முழக்கம் செய்தன.]

அரக்கர்களின் அலட்சியம் வியப்பாகிச் சீற்றமாகி அஸ்திர சஸ்திரங்கள் பிரயோகமாகத் தொடங்கியும், அனுமன்

இன்னும் அலட்சியமாகத்தான் இருக்கிறான்:

செறிந்தன மயிர்ப்புறம்
தினவு தீர்வுறச்
சொறிந்தன எனஇருந்(து)
ஐயன் தூங்கினான்!

[செறிந்தன மயிர்ப்புறம் – அந்த ஆயுதங்கள் உடம்பின் மேற்புறத்து ரோமங்கள் மீது நெருங்கியனவாய். தினவு தீர்வுற – தினவு தீரும்படி. சொறிந்தன என – சொறிந்தாற் போலத் தோன்ற.]

எவ்வளவு நகைச்சுவையுடன் தொடங்குகிறது இந்தப் பஞ்ச சேனாபதிகளின் போர், பாருங்கள்! அனுமன் சற்று உறங்குவது போலக் கண் மூடியதும், அரக்கர்களின் வீரச் செருக்கையும் கோபத் தாக்குதலையும் சொல்லவா வேண்டும்?

அனுமனும் இருப்புத்தூணை ஏந்திச் சாடுகிறான். மறுபடியும் இரத்தப் பெருக்கும் பிணக் குவியலும் தான். சேனைகள் அழியச் சேனாபதிகள் நெருங்கி வருகிறார்கள்.

ஒரு சரம கவி

சேனாபதிகள் ஐவரும் கொல்லப் படுகிறார்கள். பாடுகிறான் கவிஞன்:

வஞ்சமும் களவும்
வெஃகி வழியலா
வழிமேல் ஓடி,
நஞ்சினும் கொடிய
ராகி நவைசெயற்(கு)
உரிய நீரார்,
வெஞ்சின அரக்கர்
ஐவர், ஒருவனே
வெல்லப் பட்ட
அஞ்செனும் புலன்கள்
ஒத்தார்; அனுமன்
நல்லறிவை ஒத்தான்.

[வெஃகி — விரும்பி. நவை—குற்றம். நீரார் – தன்மையுடையவர்கள். ஒருவனே – ஒருவனால்.]

இந்தச் சேனாபதிகள் ராஜதந்திரிகளாகவும் இருந்திருக்க வேண்டும். அதனால் தானே காலனைக் காலிலும்கையிலும் கட்டிக் கொணர்ந்து அவனுடைய நிறத் துவேஷத்தையும் ராஜத் துரோகத்தையும் ஒருங்கே போக்கி ராவணேசுவரனுடைய ஆட்சியின் மாட்சியை நிலை நிறுத்தினார்கள்?

இப்படி எத்தனையோ ராஜதந்திரச் செயல்கள் செய்திருப்பார்களே, அவற்றுக்கெல்லாம் ஒரு பெயர் 'வஞ்சம்' என்கிறான் கவிஞன். 'ராஜ தந்திரம்' என்று சொல்லத் தெரியாமல் 'வஞ்சம்' என்கிறான். பொய் சொல்லத் தெரியாத குழந்தை போல, கிராம வாசி போலப் பேசுகிறது கவியுள்ளம்.

இவர்களுக்கு வஞ்சமே ராஜதந்திரம் என்றால், இவர்களது திக்விஜயச் செயல்களை என்னென்பது? 'களவு' என்று சுருங்கக் கூறி விளங்க வைக்கிறான். வீட்டில் திருடினால் என்ன, நாட்டைத் திருடினால் என்ன? — எல்லாம் திருட்டு, திருட்டே!

இவர்கள் பந்தய ஓட்டம் ஓடினார்களாம். வழியல்லாத வழிமேல் செல்லுகிறவன் ராவணன் என்றால், இவர்களோ வழியல்லாத வழிமேல் ஓடுகிறவர்கள்! குருவுக்கு மிஞ்சின சிஷ்யர்கள்! ராஜாவுக்கு முன்னே படுகுழியில் விழுந்து விடுகிறார்கள்.

வழியலா வழிமேல்
ஓடி !

அதிகார வேடம் பூண்டிருந்த இவர்கள் எப்பேர்ப் பட்ட குற்றவாளிகள்!


நஞ்சினும் கொடிய–
ராகி நவைசெயற்கு
உரிய நீரார்.

இவர்களுக்கு உரிய குணமே குற்றம் செய்வது தான். சமுதாயத்திற்கு நஞ்சு என்றால் போதாது–' நஞ்சினும் கொடியர்.' நஞ்சு உடம்பைத் தானே கொல்லும்? இச் சேனாபதிகளோ சன்மார்க்கத்தையே கொலை செய்தவர்களல்லவா?

இத்தகைய ஐந்து அரக்கர்களை வென்ற அனுமன், ராட்சஸ ஆவேசத்துடன் ஆசை வழிகளிலும் நாச வழி



களிலும் ஓடுகிற பஞ்சேந்திரியங்களை வென்று அடக்கும் நல்லறிவு போல விளங்குகிறானும்:



வெஞ்சின அரக்கர்
ஐவர், ஒருவனே
வெல்லப் பட்ட

அஞ்செனும்
புலன்கள்
ஒத்தார் ;
அனுமன் நல்
அறிவை
ஒத்தான்

தத்துவ ஞானத்தின் அடிப் படை உண்மை புலனாகிறது இந்தச் சரம கவியின் உவமையிலே. ராவணனுடைய பஞ்ச சேனாபதிகள் ஏதோ ஒரு காலத்திலா இருந்தவர்கள்? நல்லறிவுக்குக் கட்டுப்படாத நம்முடைய பஞ்சேந்திரியங்களே ராவணாகாரமான நமது ஆசைக்கும் ஆணவத்திற்கும் பஞ்ச சேனாபதிகள் அல்லவா ?

* * *

இச் சுந்தர காண்டத்திலே கணையாழி கொடுத்த பின்பு இதுவரை மூன்று போர்கள் நடைபெற்றிருக்கின்றன. இம் மூன்று போர்களும் எப்படி ஒன்றுக்கொன்று வித்தியாசமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன

என்பதைச் சற்று நோக்கி விட்டு மேலே செல்லலாம்.

முதலாவது 'கிங்கரர் வதைப் படல'த்திலே, அனுமன் அசோக வனத்தை அழித்த பின்பு செய்த ஆரவாரம் ராவணன் காதில் விழ, அவன் கிங்கரர்களை ஏவினான். நீண்ட காலமாகப் போர் பெறாது தவித்துக் கொண்டிருந்தவர்கள். 'கஞ்சி வரதப்பா!' என்றதும் 'எங்கு வரதப்பா?' என்று கிளம்பியவர் போலப் போர்க்களம் போனார்கள்.

இன்னது நடக்கிறது என்று தெரியாமலே கிங்கர வீரர்கள் கொலைக்களத்திற்குச் செல்லும் ஆடுகள் போலச் செல்லத் தொடங்கி விட்டார்கள். 'இவன், இவன்! இது, இது!' என்று குரங்கை நெருங்கிப் போரிட்டார்கள்.

சம்புமாலியோ, கிங்கரர் வதைச் செய்தி கேட்ட ராவணனால் ஏவப்பட்டு, 'என்ன பாக்கியம் செய்தோம்!' என்று மகாராஜ பக்தியுடன் போருக்குப் புறப்பட்டான். குரங்கைக் கயிற்றால் கட்டிக் கொண்டு வருமாறு லங்கேச்வரன் ஏவப் போர்ச்சினம் போவது போலப் போனான், சிறப்பான குதிரைப் படைகளுடன்.

பஞ்ச சேனாபதிகளோ ராவணன் ஏவாமலே போருக்குப் புறப்படத் துடித்து அனுமதி பெற்றார்கள். 'கிங்கரர்களையும் சம்பு மாலியையும் கொன்ற குரங்கை நானே பிடிப்பேன்!' என்று ராவணன் கொதித் தெழுந்ததும், குதித் தெழுந்தார்கள், பஞ்ச சேனாபதிகள்.

ஏற்கெனவே போய்ப் பலியாகிவிட்ட கிங்கரர்களையும், சம்புமாலியையும் 'வெற்றி பெறத் தக்க வலிமையில்லாதவர்' என்று இகழ்ந்து கொண்டே புறப்பட்டார்கள். புறப்பட்ட அரக்க வீரர் சிலரை மனைவி மக்கள் தடுக்க முயல்வதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே காண்கிறோம்.

இப்படி இப் போர்களின் தொடக்கத்தை மூன்று விதமாக ரஸமாய் அமைத்துக் காட்டும் கவிஞன், இப் போராட்டங்களின் இறுதியை எப்படிச் சித்திரிக்கிறான் என்பதையும் சற்று ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

பஞ்ச சேனாபதிகளின் வீர பராக்கிரமங்களையும் வெற்றிப் பிரதாபங்களையும் பிரமாதமாய்க் கட்டியங் கூறி அறிவிப்பது போலப் பிரஸ்தாபித்து இவர்களைப் போருக்கு அனுப்பிவைத்த கவிஞன், இவர்களுடைய இழிவான அழிவைச் சில பாடல்களில் சொல்லி விட்டு ஒரு சரம கவியும் பாடிக் காட்டுகிறானல்லவா? எழுவினால் அடித்தும், மிதித்தும் வாலினால் வரிந்து இறுக்கியும், தலைமேல் குதித்தும் இவர்களை ஒழித்து விடுகிறான் அனுமன்.

சம்புமாலியோ தான் வெற்றி பெற்றது போன்ற ஒரு சந்தர்ப்பத்திலேயே கொல்லப்பட்டான். அனுமனுடைய 'வெற்றி எழு'வை அவன் அறுத்துத் தள்ளிய அந்த வெற்றியே அவனுக்கு ஆபத்தாயிற்று. நிராயுத பாணியாக்கப் பெற்ற அனுமன் சம்புமாலியின் வில்லை அவன் கழுத்திலேயே மாட்டி யிழுத்துக் காரியத்தை முடித்துக் கொண்டானல்லவா?

கிங்கர நாசமோ, எத்தனை தினுசாகக் கொல்ல முடியுமோ அத்தனை தினுசாக அனுமன் கொன்றதாக வருணிக்கப்படுகிறது.

இம் மூன்று போர்களின் தொடக்கத்தையும் இறுதியையும் ஒருவாறு ஆராய்ந்தோம். போர் நடந்து கொண்டிருக்கும் போதே கவிஞன் செய்யும் வருணனைகளிலும் வேற்றுமைகளைக் காணலாம்.

கிங்கரர் வதைப் படலத்தின் இடையிலே தான் எத்தனை அழகிய பாடல்கள், கற்பனைகள் — என்ன கொடிய நகைச் சுவை! பாடப்பாட ரஸமான பகுதிகள் எத்தனை! மோக நித்திரைக்கு உட்பட்டு நடப்பவர்போல் நடந்து நடந்து, மேலும் மேலும் அனுமன் மேல் நடந்து பலியாகும் அதிசயம்தான் என்ன!

இந்த வருணனைகளிலிருந்து மாறுபட்டு அமைந்திருக்கின்றன சம்புமாலி வதைப் படலத்தினிடையே வருகின்ற வருணனைகள். உக்கிரமான போரை எத்தனை உபாயங்களால் நம் கண் முன் கொண்டு வருகிறான் கவிஞன்! இறுதியில் ஒரு சம்பாஷணையும் அமைத்து அப்பால் செல்லுகிறான் சம்பு மாலி வதைக்கு.

இப்படி இரண்டு போர்களை வருணித்தும் அலுத்துப் போகாமல், பஞ்சமில்லாமல் வந்து விழுகின்றன வருணனைகள் பஞ்ச சேனாபதிகள் வதைப் படலத்திலும்.

இயற்கையில் இரண்டு இலைகளோ, இரண்டு கைகளோ, முகங்களோ ஒத்திருக்கவில்லை. அப்படியே தான் கம்பனுடைய போர்களும் என்று சொல்லத் தோன்றுகிறது.

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

44. துள்ளிய தீக்குஞ்சு

பஞ்ச சேனுபதிகளும், துணைப்படையாக வந்த அரக்கர் யாவரும் இறந்தொழிந்தது ராவணனுக்குத் தெரிய வேண்டுமல்லவா ? கிங்கரர் வதை, சம்பு மாலி வதை, பஞ்ச சேனுபதிகள் வதை என்ற முப்பெருந் தோல்விகளிலும் தோற்றவர்களில் ஒருவருமே தப்பியோட முயலவில்லை. எல்லாரும் வீர மரணம் அடைகிருர்கள். எனவே அரக்கர் கோனுக்குச் செய்தி தெரிவது எப்படி ?

கொடுக்கும்,கோபமும்,பக்தியும்

பொழிலுக்குக் காவலாளிகளாயிருந்த அந்தப் பழைய காவல்—தேவர்களைத் தான் கவிஞன் மறுபடியும் சாவோலை கொண்டு போகும் தூதராக நியமிக்கிருன். அரக்கவீரர்கள் யாவரும் இறந்ததைக் கண் கூடாகக் கண்ட இக் காவலாளிகளுக்குத் தான் பழைய காவல் – உத்தியோகம் போய் விட்டதே ! தங்களைத் தாங்களே ஒரு புதிய உத்தியோகத்தில் நியமித்துக் கொண்டார்கள் என்பதும் நமக்குத் தெரிந்தது தானே ?

'நாம் இனி இங்கேயிருந்தால் அந்தக் குரங்கு நம்மைச் சும்மா விட்டு வைக்கப் போவதில்லை' என்று ஏங்கி ஓடுகிருர்களாம். இங்கே வானர பயம், அங்கே ராவண பயம் இப்போது.

நாமும் இவர்களோடு போய் ராவணன் முன்னே வாசிக்கும் சாவோலையைக் கேட்போம்.

தானையும் உலந்த-
தையா ! தலைவரும்
சமைந்தார்

[தானை – சேனை. சமைந்தார் – செத்தார்.]

என்று ஆரம்பமாகும் இச் செய்தி எப்படி முடிகிறது பார்க்கலாம்.

போர் புரியாமல் பதுங்கியிருந்து தாங்கள் உயிர் தப்பி வந்த சாமர்த்தியத்தை, 'வீரர்களை யெல்லாம் விரைவிலே கொன்ருெழித்து இன்னும் இரை கிடைக்க வில்லையே !' என்று சும்மாவிருக்கும் குரங்கின் சாமர்த்தியத்தோடு பிணைத்துப் பேசுகிருர்கள் இக் காவலாளர்கள்.

'வானையும் வென்று-
ளோரை வல்லையில்
மடிய நூறி
ஏனையர் இன்மை;
சோம்பி இருந்த(து)அக்
குரங்கும் !' என்ருர்.

[வல்லையில் – விரைவில். நூறி – அழித்து.]

தேளுக்குக் கொடுக்கைப் போல இந்தக் கவிக்குக் கொடுக்கு இது :

'ஏனையர் இன்மை
சோம்பி இருந்ததக்
குரங்கும்' என்ருர்.

இந்தக் கொடுக்கிஞல் கொட்டப்பட்ட ராவணனது கோபத்தைச் சொல்ல வேண்டுமா, கேட்க வேண்டுமா ? கொடிய கோபாக்கினி பொங்க வருகின்ற பெரு மூச்சிலே ராவணன் மார்பில் அணிந்திருக்கும் பூமாலையே கரிந்து விட்டதோ எனத் தோன்றுகிறதாம். செவ்வரக்கு ஊட்டியது போலக் கண்கள் மிகச் சிவந்து காண்கின்றன.

'இனி யாரையும் போருக்கு அனுப்புவதில்லை; நாமே புறப்படுவோம்' என்று சிங்காதனத்திலிருந்து சீறி எழுகின்றான். உடனே இவன் காலில் வந்து வணங்குகிறான் ஓர் இளைஞன்; வணங்குவது போல ராவணனை எழுந்து போகவொட்டாமல் தடுக்கவும் செய்கிறான்.

இப்படிக் குறுக்கிட்டுத் தடுத்து 'எனக்கே இந்தப் போரைத் தருவாய்' எனப் பிரார்த்திக்கும் வீர இளைஞனைப் பாருங்கள்.



ஊட்டரக்(கு)
உண்ட
போலும்
நயனத்தான்
ஒருப்பட்
டானைத்
தாட்டுணை
தொழுது
மைந்தன்
தடுத்(து) இடை,
'தருதி!'
என்றான்.

[ஊட்டு அரக்கு உண்ட போலும் நயனத்தான் — செவ்வரக்கு ஊட்டப்பட்டது போலச் சிவந்து தோன்றிய கண்களையுடைய ராவணன். ஒருப்பட்டானை-உடன் பட்டுக் கிளம்பிய ராவணனை. தாள் துணை – இரண்டு பாதங்களிலும். தடுத்து இடை – புறப்பட வொட்டாமல் இடையே தடுத்து நிறுத்தி. தருதி– இந்தப் போரை எனக்குத் தருவாய்.]

இந்த மைந்தன் தான் ராவண குமாரர்களில் ஒருவனான அட்ச குமாரன். 'இழிவான பிராணியாகிய ஒரு குரங்கின் மேல் சக்கரவர்த்தியாகிய நீ போவாய் போலும்! சிறிதும் தகுதியில்லையே' என்கிறான்.

இக்கடன் அடியேற்(கு)
ஈதி, இருத்தி ஈண்(டு)
இனிதின், எந்தாய்!

[கடன்–கடமை. அடியேற்கு–அடியேனுக்கு. ஈதி–ஈந்து. இருத்தி–இருப்பாயாக. ஈண்டு–இங்கே. இனிதின்–சுகமாக.]

என்று தந்தையைப் பிரார்த்திக்கிறான் மைந்தன்.

இந்திரனுடன் நடந்த அந்தப் பழம் பெரும்போரை நினைவூட்டுகிறான். அதில் இவனது தமையனை இந்திரஜித்தை ஏவிவிட்டான் ராவணன். அதனாலன்றோ இந்திரஜித்து இந்திரஜித்தானான்? அந்தப் புகழும் பெரும் தம்பிக்குத் தீராத மனக் குறைதான்! அத்தகைய சந்தர்ப்பம் தான் கிடைக்க வில்லையே!



ஆகவே, வலிமை யில்லாத ஒரு குரங்கின் மேலாவது தன்னை ஏவவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறான்.

'அண்டர்கோன் தன்னைப்
பற்றித் 'தருகெ'ன,
அடியேன் நிற்கக்

கொண்டனை எம்முன்
தன்னைப் பணி,என
நெஞ்சம் கோடல்

உண்(டு), அது தீரும்
அன்றே? உரனிலாக்
குரங்(கு)ஒன் றேனும்,

எண்திசை வென்ற
நீயே ஏவுதி
என்னை!' என்றான்.

[அண்டர்கோன் — தேவேந்திரன் தருக என — தருவாய் என்று சொல்லி எம்முன் — என் தமையனை இந்திரஜித்து. நெஞ்சம் கோடல் — நெஞ்சிலே கொண்டது; மனக் குறை. அன்றே — அல்லவா. உரன் இலா — வலிமை யில்லாத. ஏவுதி — ஏவுவாயாக.]

எட்டுத் திசைகளையும் வென்ற ராவணேசுவரன் ஏவும்போது இந்த அற்ப வெற்றியாலும் அந்தப் பழைய மனக் குறை ஒருவாறு தீர்ந்து போகக் கூடும் என்று மகன் தெரிவித்ததும், மகிழ்ந்து நோக்கி விடை கொடுக்கிறான் தந்தை.

மைந்தன் தான் எவ்வளவு மகிழ்ச்சியுடன் போர்க் கோலம் பூண்டு புறப்படுகிறான்!

'துனைபரித் தேரின்
ஏறிச் சேறி'என்(று)
இனைய சொன்னான்:

புனைமலர்த் தாரி—
னானும் போரணி
அணிந்து போனான்.

[துனை — விரைந்து செல்லுகிற. பரித்தேரின் ஏறி — குதிரைகள் பூட்டிய தேரின்மேல் ஏறி. சேறி — செல்வாய். இனைய — இவ்வாறாக. புனைமலர்த் தாரினானும் — அலங்காரமாகப் பூமாலையை அணிந்து கொண்ட அட்ச குமாரனும். போர் அணி அணிந்து — போர்க் கருவிகளை அணிகளைப் போல் அணிந்து கொண்டு.]

ஆசியும் அபசகுனமும் பரிகாசமும்

ராவணன் இன்னும் அனுமனை உள்ளபடி அறிந்து கொள்ள வில்லையென்றே தோன்றுகிறது. அட்ச குமாரனோ இந்தப் போரின் கொடுமையைச் சற்றும் உணர்ந்து கொள்ளாத பள்ளிச் சிறுவனைப் போலவே நடந்து கொள்கிறான்.

புது மலர் கொண்டு தொடுத்த பூமாலையை அணிந்து கொண்டு, போர்க் கருவிகளையும் தங்கக் காப்பு, மோதிரம், இன்றைய கைக்கடிகாரம் முதலியவற்றை அணிந்து கொள்வது போல் அணிந்து கொண்டு ஒரு புதுமாப்பிள்ளை போலப் புறப்படுகின்றான்!—என்று கூடத் தோன்றுகிறது.

அட்சகுமாரன் தேர்மேல் ஏறியதும், வயது முதிர்ந்த அரக்கர்கள் ஆசி கூறுகிறார்கள் :

கூறினர் அரக்கர்
ஆசி.

ஆசிகளை மட்டும் அள்ளி வீசிப் பின் தொடர விட்டுத் தாங்கள் வீட்டில் உட்கார்ந்து விடும் பேர் வழிகளல்ல; இவர்கள் உடன் போகிறார்கள்.

அரக்க ராஜ வம்சத்தில் பிறந்த பன்னீராயிரம் குமாரர்களும் அட்ச குமாரனைச் சூழ்ந்து கொண்டு போகிறார்களாம் :

ஆறிரண்(டு) அடுத்த
எண்ணின் ஆயிரம்
குமரர், ஆவி
வேறிலாத் தோழர்,
வென்றி அரக்கர்தம்
வேந்தர் மைந்தர்,
ஏறிய தேரர்
சூழ்ந்தார்.

[ஆறு இரண்டு அடுத்த எண்ணின் ஆயிரம் – பன்னீராயிரம். ஆவி வேறு இலாத் தோழர்-உடல் வேறே யன்றி அட்ச குமாரனையே உயிராகக் கொண்ட தோழர்கள். வென்றி – வெற்றி.]

இவர்களில் மந்திரி குமாரர்கள், சேனாபதிகளின் குமாரர்கள் முதலானவர்களும் உண்டு. இளைஞர்களாயினும், அரக்கர் என்ற காலாக்கினியின் குஞ்சுகளல்லவா ?

மிக்க ஆடம்பரத்தோடு போகிறான் அட்ச குமாரன் தோழர்கள் சூழ. அரக்க மகளிரின் சிந்தையும் தொடர்ந்து போகப் போகிறாளும்.

இன்னும் யார் யார் தொடர்ந்து போகிறார் என்பதையும் காட்டுகிறது கவிதை:

காகமும் கழுகும்
பேயும் காலனும்,
கணக்கில் காலம்

சேகுற விளையிற்
செய்த தீமையும்
தொடர்ந்து செல்ல —

[சேகு உற – உறுதி பொருந்த.]

அரக்கர்கள் பன்னெடுங் காலமாகச் செய்து வந்திருக்கும் பழவினை, அட்ச குமாரன் என்னும் இந்த அழகு வாய்ந்த அரசிளங் குமரனைப் பட்சிக்கப் போகிறது! எவ்வளவு தத்துவ ஞானக் கடலாழம் காண்கிறோம்! 'ஐயோ பாவம்!' என்ற ஆழ்ந்த இரக்கமும் தொனிக்கின்றது.

அழுகுரலும் எழுகின்றதாம் நிமித்தம்போல. முன்னே நிகழ்ந்த முப்போர்களிலும் இறந்து போன தங்கள் கணவர்களை அழைத்து ஆரவாரம் செய்கிறார்கள்!

ஆனால் இந்த அழுகுரல்களையெல்லாம் அடக்கி விடுகின்றன மகிழ்ச்சி ஆரவாரங்களும் போரிசைக் கருவிகளும்.

இவ்வளவு சம்பிரமமாக வந்து கொண்டிருக்கும் அட்சனை மேலே யிருந்து பார்க்கிறார்கள் தேவர்கள், — பயத்தோடுதான். யமனும் தொடர்ந்து வந்து நோக்குகிறான் புன்சிரிப்புடன்!

தொடர்ந்த பேய்களும் சுழலும் கண்களுடன் பார்க்கின்றன. அட்சனையும் பார்த்துத் தங்கள் வயிற்றையும் பார்த்துத் தோள் கொட்டுகின்றன. அனுமனும் பார்க்கிறானும் இந்த நிலையில்.

இக்குரங்கைப் பார்த்த அட்ச குமாரனுக்கோ அடக்க முடியாத சிரிப்பு வந்து விடுகிறது ;

'கொன்றதிக் குரங்கு
போலாம் அரக்கர்தம்
குழாத்தை!' என்றான்.

அட்ச குமாரனுடைய அலட்சியச் சிரிப்பைக் கண்டதும் வயது முதிர்ந்த தேர்ச்சாரதி,

மன்னனே(டு) எதிர்ந்த
வாலி குரங்கு...

என்று ஞாபகப் படுத்துகிறான்.

அட்ச குமாரனோ 'குரங்கு என்று ஓதும் கருவையும் களைவன்!' என்று பிரதிக்ஞை செய்கிறான்.

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

45. தேய்ந்த செருக்கு

ஒரு குன்றைச் சூழ்ந்து பருவ மழை பொழிவது போலப் பொழிகின்றது ஆயுத மழை. திடீரென்று திசைகளே அஞ்சுவது போலத் தோன்றுகிறது. சலிக்கின்றன மண்ணும் விண்ணும். ஆனால் அனுமனுக்கோ அலுப்புமில்லை, சலிப்புமில்லை.

அரக்கர் போர்

முட்டி முறிகின்றன பலவகைக் கொலைக் கருவிகளும். யானைகள் பேரொலியுடன் மடிந்து விழுகின்றன. தேர்கள் அழிகின்றன. தாவி வருகின்ற குதிரைகளும் கூட்டங் கூட்டமாக விழுந்தழிகின்றன. அரக்கர்களும் விழுகின்றார். வெகு விரைவாக நடக்கிறது யம ராஜ விருந்து.

வந்தவர், வந்து கொண்டிருப்பவர், வரத் தொடங்கியவர் ஆகிய அரக்கர்களுக் கெல்லாம் எதிரே தானும் தனிமையுமாகத் தான் நின்று சமாளிக்கிறான் அனும வீரன். போராடப் போராட வீரம் பொங்குகிறது. ஆறாகிச் சேறாகிறது போர்க்களம்.

ஒருபுறம் பார்த்தால் தேர்களே பட்டன எனத் தோன்றுகிறது. 'காலாட் படைகளே பட்டன' எனத் தோன்றுகிறது, வேறொரு புறமாகத் திரும்பிப் பார்த்தால். ஒருபுறம் குதிரைகளே பட்டன என்பது போலக் காட்சி. 'எதிர்ப் புறத்தில் மேகங்களே பட்டன!' என்று பிரமிக்கும்படி யானைகளின் வீழ்ச்சி.

அரக்கர்களிடையே புகுந்து புகுந்து அனுமன் போரிடும்போது ஒரு சமயம் தாழியில் தயிர் கடையும் மத்தைப் போலக் காண்கிறான். ஒரு சமயம் அரக்கர் கடல் போலக் கொந்தளிக்க, அனுமன் பிரசண்ட மாருதம் போலவும், கடல் நீரையே பருகும் வடவைப் பெருங் கனல் போலவும் காண்கிறான்.

அட்சன் போர்

அரக்கர் சேனையின் தொகை குறைவது கண்டு அட்சகுமாரன் தன் ஒற்றைத் தேருடன் அனுமனுக்கு எதிரே வருகிறான். அம்புகளைப் பிரயோகிக்கிறான். தன் இருப்புத் தண்டினால் அந்த அம்புகளை அடித்துத் தள்ளுகிறான் அனுமன். அந்த இருப்புத் தண்டைத் தன் அஸ்திரங்களால் அட்சன் பொடியாக்கவே, வந்து விடுகிறது ஆபத்து,—அட்சனுக்குத்தான்!

அந்தத் தேரின்மேலே பாய்ந்து விடுகிறான் அனுமன். உடனே சாரதி கொல்லப்படுகிறான். தேரும் சின்னா பின்னமாகிறது. தேர்க் குதிரைகளும் இறக்கின்றன.

அட்சனோ அனுமன் தோளிலும் மார்பிலும் அம்புகளைப் பொழிந்த வண்ணமாய்ப் போராடுகிறான். அனுமனோ லட்சியம் செய்யாமல் அந்த வில்லைப் பிடித்துக் கொள்கிறான்:

நேரிற் சென்றவன்
வயிரக் குனிசிலை
பற்றிக் கொண்டெதிர்
உற நின்றான்.

[வயிரக் குனிசிலை – வலிய வளைந்த வில்லை. எதிர் உற – எதிரிலே.]

அனுமன் தன் ஒரு கையால் அந்த வில்லைப் பற்றிக்கொண்டதும், அதை மீட்டுக்கொள்ளும்படி இரு கையாலும் பிடித்திழுக்கிறான் அட்சன். இவன் இழுக்க, அவன் இழுக்க வில் முறிந்து போகிறது. உடனே அட்சன் தன் உடைவாளை உருவ, அதுவும் பொடியாக்கப்படுகிறது.

வாள் போனதும், 'தோளால் போர் செய்வோம்' என்று அட்சன் அனுமனைத் தழுவிக்கொள்கிறான். தழுவியது தான் தாமதம். நெடு வாலும் தழுவிக் கொள்கிறது, உடம்பு நிமிரவொட்டாமலே, மலைப்பாம்பின் பிடிபோல.

அனுமன் செய்த அட்சகுமார வதம் ஒரே செய்யுளடியில் வருணிக்கப்படுகிறது;

தேய்த்தான், ஊழியின்
உலகேழ் தேயினும்
ஒருதன் புகழ்இறை
தேயாதான்.

[ஊழியின் — யுகாந்த காலத்தில். உலகு ஏழ் தேயினும் — ஏழுலகங்களும் அழிந்து போனாலும். ஒரு தன் புகழ் — ஒப்பற்ற தனது புகழ். இறை — சிறிதும்.]

எவ்வளவு ஆடம்பரமாக வந்தான் அட்சகுமாரன்! 'அண்ணன் இந்திரஜித் தானால், நாம் "ஹனுமஜித்" என்றாவது பெயர் பெறலாமே!' என்பதாக. அந்தத் துள்ளிய இளங் துடுக்கைச் சற்றும் தயை தாட்சணியம் இல்லாமல் தரையோடு தரையாக அரைத்துத் தேய்த்து ஒழித்து விடுகிறான் அனுமன்.


இப்படிப் பிரதாப லங்கேசுவரனது அருமைப் பிள்ளை ஏதோ ஒரு மூட்டைப் பூச்சி போல் நசுக்கப்பட்டதைத் தங்கள் கண் முன்னே கண்ட அரக்கர்கள் எப்படித் திகிலடைந்து போயிருக்க வேண்டும்!

பயத்தின் சிகரத்திலே —

கம்பனுடைய மேதைதான் அவ்வளவு திகிலையும் நம் கண் முன் கொண்டு வந்து காட்ட முடியும்:

புண்தாழ் குருதியின்
வெள்ளத்(து) உயிர்கொடு
புக்கார் சிலர்; சிலர்
பொதிபேயின்
பண்டா ரத்திடை
இட்டார் தம்முடல்;
பட்டார் சிலர்; சிலர்
பயம்உந்தத்
திண்டா டித்திசை
அறியா மறுகினர்,
செற்றார் சிலர்; சிலர்
செலவற்றார்;





**கண்டார் கண்டதோர்
திசையே விசைகொடு
கால்விட் டார்,படை
கைவிட்டார் !**

[புண் தாழ் குருதி – புண்களிலிருந்து பெருகுகிற இரத்தம். வெள்ளத்து உயிர்கொடு புக்கார் – வெள்ளத்திலே உயிரோடு புகுந்து ஒளித்துக் கொண்டார்கள். பொதி பேய் – பிணங்களைச் சுற்றிப் பொதிந்து நிற்பது போலத் தோன்றிய பேய்கள். பண்டாரம் – (இங்கே) பேய்களின் பொக்கிஷமாகிய பிணக் குவியல். பட்டார் – (பயத்தினாலே) இறந்தார்கள். உந்த – தூண்ட. மறுகினர் – கலங்கினவர்களாய். செற்றார் – ஒடுங்கிக் கிடந்தார்கள். செலவு அற்றார் – செல்ல மாட்டாமல் பிரமித்திருந்தார்கள். கண்டார் – (இங்கே) பைத்தியக்காரப் பார்வை பார்த்தார்கள். கால் விட்டார் – ஓடினார்கள். படை – ஆயுதங்கள்.]

இதுவரையிலும் போர் முனையில் முதுகு காட்டாது உயிர் கொடுத்தார்கள் அரக்க வீரர்கள் என்பது சென்ற மூன்று போர்களிலும் நாம் கண்டதுதான். தோல்வி மேல் தோல்வி, அதற்கு மேலும் தோல்வி மேல் தோல்வி—இந்த நான்காவது தோல்வியில் தங்கள் சக்ரவர்த்தியின் அருமைப் பிள்ளையும் அனுமனால் 'மண்ணாகிய நீ, மண்ணாகிப்போய் விடு!' என்றவாறு தேய்க்கப்பட்

டான். எனவே இப்போது அரக்கவீர உள்ளத்திலும் கோழைத்தனம் குடியேறுகின்றது.

இந்தப் பாட்டைத் திரும்பத் திரும்பப் பாடப் பாட, அந்தப் போர்க் களமும் அப்பெருங் குழப்பமும் அப்படியே நம் கண்முன் வந்து விடுகின்றன.

கண்டார் கண்டதோர்
திசையே விசைகொடு
கால்விட் டார்,படை
கைவிட்டார்.

என்பது இங்கே திக்பிரமையின் சிகரம். கண்ட கண்ட திசை யெல்லாம் தாறுமாருக ஓடத் தொடங்கியவர்கள் பாம்பின் வாயில் போய் விழும் தவளை போல் அனுமன் நின்ற திசையிலும் ஓடினுர்கள் என்பது குறிப்பு.

அரக்கர்கள் காமரூபிகள் — விரும்பிய உருவம் கொள்ள வல்லவர். எப்படியெல்லாம் தப்ப முடியுமோ அத்தனை உபாயங்களையும் கண்டு பிடிக்கின்றன ராட்சஸ மூளைகள்!

மீனுய் வேலையை
உற்ருர் சிலர்; சிலர்
பசுவாய் வழிதொறும்
மேய்வுற்ருர்;

ஊனுர் பறவையின்
வடிவுற் ருர்சிலர்;
சிலர்நான் மறையவர்
உருவானுர்;

மானுர் கண் இள
மடவா ராய்இவன்
முன்னே நம்குழல்
வகிர்வுற்ருர்

ஆனுர் சிலர்;
சிலர், 'ஐயா, நின்சரண்!'
என்ருர்; நின்றவர்
'அரி!' என்ருர்.

[வேலை – சமுத்திரம். உற்ருர் – அடைந்தார்கள். வழிதொறும் – வழிகள் தோறும். மேய்வு உற்ருர் – மேயத் தொடங்கினுர்கள். ஊனுர் பறவை – மாமிசத்தை உண்ணும் பட்சிகள். வடிவுற்ருர் – வடிவத்தைக் கொண்டார்கள். நான்மறையவர் – நாலு வேதங்களோடு கூடிய வைதிகப் பிராமணர்கள். மானுர் கண் இள மடவார்– மான் போன்ற கண்களோடு கூடிய இளம் பெண்கள். குழல் – கூந்தல். வகிர்வு உற்ருர் – வகிர்ந்து கொண்டு நின்ருர்கள். அரி – ஹரி; விஷ்ணு.]

புல்லாந்தரையில் மேயவும் தொடங்குகிருர்களாம் நரமாமிச பட்சணிகள். 'புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?' என்னும் பழமொழியும் பொய்த்துப் போகிறதே!

இவர்களைக் காட்டிலும் புத்திசாலிகள் கழுகு முதலிய பறவைகளின் வடிவம் தரிப்பவர்கள். 'ஆசை தீரப் பிணங்களை யாவது கொத்தித் தின்னலாமே, நாமும் பிணமாவதற்குள்ளே!' என்பது இவர்கள் மூளைத் திறன்.

ஒரு போரில் எதிரிகள் மாயமாக மறைந்து விட்டார்களாம். தேடிப் பார்த்ததில், ஷர்பத்துப் புட்டிகள் அடுக்கி யிருந்த கட்டடங்களில் பலரும் ஒளித்துக் கொண்டிருந்தது தெரிய வந்தது. 'உயிர் போவதற்குள் இந்த ஷர்பத்துப் பானங்களையாவது பருகிக் கொண்டிருக்கலாமே!' என்பது அங்கே பதுங்கிய மனநிலை.

அதோ சில வைதிகப் பிராமணர்கள், கையிலே தர்ப்பைப் புல்லும் பஞ்சாங்க ஏடுமாய்! போர்க்களத்தில் என்ன வேலை அவர்களுக்கு? வேத கோஷமும் செய்கிருர்களே, அனுமன் காதில் விழும்படி; நான்மறைகளையும் முழக்குகிருர்கள்:

சிலர்நான் மறையவர்
உருவானுர்!

வேறு சிலர் அனுமனுடைய இரக்கத்திற்கே பாத்திரமாக விரும்பிப் பெண் வேஷம் போட்டுக் கொள்கிருர்கள். பெண்களிலும் இளம் பெண்கள் — அழகான இளம் பெண்கள். அதிகமாய் இரக்கம் ஏற்படத்தான்!

தாங்கள் பெண்களே என்று ருசுப்படுத்துவதற்கு—இவர்கள் மூளையே மூளை —கண்ணுடியும் சீப்பும் கையில்கொண்டு முன்னே சீவி வகுப்பு எடுக்கிருர்கள். அனுமன் கண்முன்னேதான் இந்த நாடகம்!

அனுமனையே சரணுகதி பண்ணுகிருர்களாம் சிலர். இதைக் காட்டிலும் இழிவான காரியத்தைக் கூடச் சில அரக்கர்கள் செய்யத் துணிகிருர்களாம் உயிராசையால், அது என்ன தெரியுமா?

இவர்கள் தைரியமாகவே நின்று கொண்டிருக்கிருர்கள், 'ஹரி: ஹரி:' என்று சொல்லிக் கொண்டு. இலங்கை

யில் இதற்கு முன் ஒருவனும் உச்சரிக்கத் துணிந்திராத ஹரிநாமத்தைத்தான் இவர்கள் துணிந்து கோஷிக்கிறார்கள், அனுமன் காது செவிடுபடும்படி.

'அடடா, இவ்வளவு ஆபத்திலும் என்ன புத்திசாலித்தனம்!' என்று பிரமித்துப் போகிறீர்களல்லவா? இவர்களைக் காட்டிலும் அதி புத்திசாலிகளும் உண்டு. அவர்களையும், அவர்கள் உயிர் தப்பச் செய்யும் உபாயங்களையும் பார்க்கலாம்.

சில அரக்கர்கள் தப்பி ஓட முயலும் போது, மனைவிமாரும் வேறு நெருங்கின சுற்றததாரும் எதிரே வந்து தழுவிக் கொள்கிறார்களாம். ஆபத்திலும் ஆபத்தல்லவா இந்த நிலைமை? இவ்வளவு நெருக்கடியான நிலைமையிலும் மூளை பிரமாதமாக வேலை செய்கிறது.

'ஐயோ, இப்படியாவது உயிர் தப்பி வந்தார்களே!' என்ற அகமகிழ்ச்சியுடன் தான் மனைவியர் தழுவிக் கொண்டனர். தப்ப முயலும் ஆசாமிகளோ வானர பயத்தால், 'நாங்கள் வானவர்களல்லவா? வேடிக்கை பார்க்க வந்தோம். உங்கள் உறவினரில்லையே நாங்கள்!' என்று சொல்லிக் கொண்டே நழுவிப் போய்விடுகிறார்கள்.

அடிமைத் தேவர்களென்று தம்மைச் சொல்லிக்கொண்டு ஓடுகிற பரிதாபம் ஒருபுறம். 'நாங்கள் அரக்கரில்லை, மனிதர்கள்!' என்று தங்களுக்கு இரையான 'மனிதப் புழுக்களி'ன் பேரால் தப்ப முயலும் விந்தை ஒருபுறம். வண்டுகளாகிச் சோலையில் பறந்து உயிர்பிழைத்தவர்களும் உண்டு.

அதி புத்திசாலிகளாகிய சிலர் கீழே கிடந்த கல்லை எடுக்கிறார்கள்; தங்களைக் காட்டிக் கொடுக்கும் கோரப் பற்களைத் தட்டி விடுகிறார்களாம். சில மேதாவிகள் செம்பட்ட மயிரைக் கறுப்பாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுகிறார்களாம்.

இவ்வளவு பரிதாபமான நிலைகளையும் இதோ பார்த்துக் கொள்கிறோம்:

தம்தா ரமும், உறு
கிளையுந் தமைஎதிர்
தழுவுந் தொறும், 'நும
தமர் அல்லேம்;


வந்தேம் வானவர்!'
என்றே கினர்சிலர்;
சிலர், 'மா னுயர்!' என
வாய்விட்டார்;

மந்தா ரம்கிளர்
பொழில்வாய் வண்டுகள்
ஆனார்சிலர்; சிலர்
மருள்கொண்டார்;

இந்தார் எயிறுகள்
இறுவித் தார்சிலர்;
எரிபோல் குஞ்சியை
இருள்வித்தார்!

[தம் தாரமும் – தமது மனைவிமாரும். உறு கிளையும் – நெருங்கின உறவினர்களும். நும தமர் – உமது சுற்றத்தார். வந்தேம் – வந்தோம். ஏகினர் – அப்பால் போய் விட்டார்கள். மானுயர் – மானிடர். மந்தாரம் – ஒருவகைத் தேவ விருட்சம். கிளர் – விளங்குகிற. பொழில்வாய் – சோலையினிடத்தில். மருள் – மயக்கம்; இந்தார்–இந்து ஆர்; பிறைச் சந்திரனை ஒத்த. எயிறுகள் – கோரப் பற்கள். இறுவித்தார் – உடைத்துக் கொண்டார்கள். எரி – நெருப்பு. குஞ்சி–ரோமம். எரிபோல் குஞ்சி – செம்பட்ட மயிர், இருள்வித்தார் – இருளைப்போல் கறுப்பாக்கிக் கொண்டார்கள்.]

ஆண் பிள்ளைகளின் பாடு இந்தவிதமாக, இனி அரக்க மாதர்களின் துயரத்தைக் காண்போம்.



"நான் திருப்பதிக்குப் போனதே யில்லேங்க... ஆனா போகணும்னு ஆசை மாத்திரம் இருக்கு..."

"நீங்க அவசியம் ஒரு தரம் போயிட்டுத்தான் வரணும்!..."

எடுப்பார் கைப்பிள்ளை

"மகரம்"

இட்டிலியும் சட்டினியும், பூரியும் உருளைக் கிழங்கும், ரொட்டியும் வெண்ணெயும் என்பது போன்ற ஒரு தொடர்தான் உரலும் உலக்கையும். உரல் இல்லை என்றால் உலக்கைக்கு வேலையே இல்லை. உலக்கை இல்லாத உரலினால் உலகுக்கு என்ன பிரயோசனம்?

உரலையும் உலக்கையையும் முதல் முதலில் நாம் எங்கே பார்த்தோம் என்பது ஞாபகமிருக்கிறதா? பாலர் பாட புத்தகத்தில் ஈச்ச மரத்துக்கும் ஊஞ்சலுக்கும் நடுவிலோ அல்லது ஈக்கும் ஊதலுக்கும் நடுவிலோ இந்த உரலும் உலக்கையும் நமக்கு அறிமுகம் ஆனதை மறக்க முடியுமா? அத்துடன், உரல் என்பதை 'உறல்' என்றும், உலக்கை என்பதை 'உளக்கை' என்றும் நாம் எழுதினபோது தமிழ் உபாத்தியாயரின் வலக்கையானது நமது முதுகில் உலக்கை போல் விழுந்த அந்தப் பேரிடியை, இன்று நினைத்தாலும் நமது முதுகு சிலிர்ப்பதை நாம் எப்படி மறக்க முடியும்?

"உரலுக்கு ஒரு புறம் இடியென்றால் உலக்கைக்கு இருபுறமும் இடி" என்று சொல்லலாம்! இரண்டு முனைகளிலும் பூண் கட்டின உலக்கையை பூண் அணிந்த மங்கையர்கள் இரு கையாலும் பற்றி மாற்றி மாற்றி இடிக்கும் போது, பாவம்! அந்த உலக்கைக்கு உயிர் இருந்தால் எவ்வளவு பாடு படும்?

ஒருபுறம் காரியாலய அலுவல்களால் ஏற்படும் தொந்தரவையும், மறுபுறம் வீட்டுச் செலவுகளால் உண்டாகும் மனத்தொல்லையையும் மாறி மாறி அனுபவிக்கும் கிரகஸ்தனை உலக்கையுடன் ஒப்பிடலாம். பெற்ற தாயாருக்கும் கட்டின மனைவிக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டு, மனைவியினுடைய கண்ணீரினாலும் தாயாருடைய பட்டினியினாலும் தாக்கப்பட்டுத் திண்டாடும் ஒருவனுடைய மன நிலையை இரண்டு புறமும் இடிக்கப்படும் உலக்கையுடனல்லாது வேறு எதனுடன் ஒப்பிடுவது?

விசித்திரமான மனநிலையுள்ளவர்கள் நிறைந்த இந்த உலகில் சில ரக மனிதர்கள் உள்ளார்கள். இவர்களுக்கு மிகவும் பொறுப்பு வாய்ந்த காரியங்களைச் செய்து முடிக்க ஆவல்தான். ஆனால் அந்தக் காரியங்களைச் செய்வதில் இருக்கும் சிரமங்களை எப்படித் தாங்குவது என்று இவர்கள் பயப்படுவார்கள்! தேச சேவை செய்து பிரபல தலைவராக வர இச்சைப்பட்டு விட்ட பிறகு "அவன் என்னைப் பற்றி அவதூறு கூறுகிறானே!" "அந்தப் பத்திரிகை நான் பேசாததைப் பேசினதாகப் பிரசுரம் செய்து விட்டு, அந்த என்னுடைய பேசாத பேச்சை ஆதாரமாகக் கொண்டு ஒரு தலையங்கம் முழுவதிலுமே என்னைத் திட்டி யிருக்கிறதே!" என்று அங்கலாய்த்தால் கட்டுபடியாகுமா?

உரலில் தலையைக் கொடுத்த பிறகு உலக்கையின் தாக்குதலுக்கு நாம் பயப்பட முடியுமா? அந்த உலக்கை கொடுக்கும் அடியைத் தாங்கக் கூடிய பலத்தை நாம் பெற முயல வேண்டுமே யல்லாமல் தலையை உரலிலிருந்து எடுக்க நினைக்கக் கூடாது. 'பட்ட காலிலே படும்' என்பது போலவும், 'நகச்சுற்றியின் மீது உலக்கை இடி' போலவும் வாழ்க்கையில் அதிர்ச்சியின் மேல் அதிர்ச்சியை உண்டாக்கும் சம்பவங்கள் பல நிகழ்ந்தாலும், – அத்தனைக்கும் கலங்காத மனத்தை நாம் பெற வேண்டும்.

உலக்கையானது பல உபயோகமான, பல ஆபத்தான காரியங்களைச் செய்தாலும் அது அவைகளைத் தானே செய்வதில்லை. உலக்கை எடுப்பார் கைப்பிள்ளை. அதற்கு சுயமான மூளை கிடையாது. அதைப் பற்றினவர், தம் கையால் இடும் கட்டளையை அலாடின் கதைப் பூதம் போல தன்னுடைய தலையால் செய்து முடித்து விடுகிறது.

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

46. எம்பியோ தேய்ந்தான் ?

ஒரு மலையுச்சியில் அமர்ந்திருந்தார்களாம் கிரேக்க தெய்வங்கள், அமிர்த பானம் செய்து கொண்டே. கீழேயுள்ள மனித வர்க்கத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை. இக்கிழோர் அம்மேலோரை நோக்கித் தொழுதார்கள், அழுதார்கள். பிரார்த்தனைக் குரல்கள் அழுகுரல்கள் எல்லாம் அமிர்த வெறியி லிருந்தவர்களின் செவிகளில் இசை பாடுவது போலவே யிருந்தனவாம். இந்தச் சோக ரஸமுள்ள சங்கீதத்தையும் இன்பமாகவே அனுபவித்துக் கொண்டிருந்தார்களாம் அந்தத் தேவர்கள். இப்படி ஒரு மேலை நாட்டுக் கவி பாடுகிறான்.

அழுகையிலும் இசை

பொதுவாக மகா கவிகள் தங்கள் கவிதைச் சிகரத்திலிருந்து உள்ளொளியாகிய அமிர்த வெறியுடன் வாழ்க்கை யனுபவங்களை யெல்லாம் இசையாக வடித்து அனுபவிக்கிறார்கள். ஆனால் விசேஷ அனுதாபத்துடன், அனுபவிக்கிறார்கள். இயற்கை மீதும் மக்கள் மீதும் எல்லை யற்ற காதலுடன் வாழ்கிறார்கள். வாழ்ந்து வாழ்க்கைக்குச் சுவை ஊட்டிப் பொருள் காட்டும் தெய்வமாக் கவிகள் பாடுகிறார்கள்.

இம் மகா கவிகளுக்கு மக்கள் வாழ்வெல்லாம் பாட்டே. அறமும் பாட்டு, மறமும் பாட்டு; தொழுகையும் பாட்டு, அழுகையும் பாட்டே. 'நம்முடைய மிக மிக இனிய பாடல்கள் மிக மிகச் சோகமான நினைவுகளைப் பேசுகின்றனவேயாம்' என்பர் ஓர் ஆங்கில அறிஞர்.

இந்த முன்னுரையுடன், அட்ச குமாரன் வதைப் படலத்தின் இறுதியிலே அரக்க மாதர்களின் அழுகையையும் துயரங்களையும் வருணிக்கும் சில பாடல்களைப் பார்க்கலாம்.

அலங்காரமாக வந்த அட்சன் வதமானதும், இறவாது மிஞ்சிய அரக்கர்கள் அலங்கோலமாய்த் தப்பிப் பிழைக்க முயன்றதும் கண்டோம். இப்போது இலங்கை யெங்கும் எழுகின்ற அழுகை யொலியைக் கேட்கிறோம்.

காலில் படும்படி தமது கூந்தலை விரித்துக் கொண்டு கூக்குரலிடும் அந்தப் பெண்களையும் பாருங்கள் :

'குண்டலக் குழைமுகக்
குங்குமக் கொங்கையார்,
வண்டலைத் தெழுகுழல்
கற்றைகால் வருடவே,
விண்டலத் தகவிரைக்
குமுதவாய் விரிதலால்,
அண்டமுற் றுளதவூர்
அழுதபே ரமலையே.

[குண்டலக் குழை – குண்டலம் அணிந்த காது. வண்டு அலைத்து – வண்டுகளை அலையச் செய்து. குழல் கற்றை – கூந்தல் தொகுதி. கால் வருடவே - காலில் விழுந்து புரளவே. விண்டு - திறந்து. அலத்தகம் – செம்பஞ்சு. விரை – நறுமணம். குமுதம் – ஆம்பல். அவூர் – அந்த இலங்கை. பேர்அமலை – பெருங் குரலோசை. அண்டம் உற்றுளது – ஆகாயமெங்கும் பரவியது.]

இந்த 'அழுகை யொலி'ப் பாட்டைப் பாடிப் பாடிப் பார்க்கவே, அதாவது பாடிப் பாடி மானஸீகமாய்க் கேட்கவே, இதன் இசையின்பம் எவ்வளவு வசீகரமாய்ப் புலனாகின்றது !



கதிரெழுந் தனையசெந்
திருமுகக் கணவன்மார்
எதிரெழுந்(து) அடிவிழுந்து
அழுதுசோ ரிளநலார்
அதிநலங் கோதைசேர்
ஓதியோ(டு), அன்றவூர்
உதிரமும் தெரிகிலா(து)
இடைபரந் தொழுகியே !

[கதிர் எழுந்தனைய — இளஞ் சூரியன் எழுந்தாற் போன்ற. செந்திரு முகக் கணவன்மார் — சிவந்த அழகிய முகங்களையுடைய தங்கள் கணவர்களான இளைஞர்கள். எதிர்-முன்னே. சோர் இள நலார் — சோர்கின்ற இளம் பெண்களுடைய. அதிநலம் — மிக்க அழகுள்ள. கோதை சேர் — பூமாலை சேர்ந்த. ஓதியோடு — கூந்தலுடனே. அன்று அவூர் — அப்பொழுது அந்த ஊரிலுள்ள. உதிரமும் — இரத்தமும். தெரிகிலாது — தெரிய

அதோ ஒரு காட்சி. அழுது சோர்கின்ற இளம் பெண்கள் அழகுள்ள மாலை யணிந்த கூந்தலுடன் அப்படியே வந்திருக்கிறார்கள். கூந்தல் மட்டும் செம்பட்டை மயிர்தான். கணவருக்கு எதிரே போய் அடி விழுந்து தலைவிரி கோலமாய் அழும்போது, அந்தக் கூந்தலுக்கும் இரத்தத்திற்கும் வேறுபாடு தோன்றவில்லையாம்.


இந்தப் பாட்டிலும் சிறப்பு இதன் பொருளல்ல, இசைச் சிறப்பே. பாடப் பாடப் புலனாகும்:

முடியாத தாயிற்று. இடை – வேற்றுமை. பரந்து ஒழுகி–பரவிப் பெருகி.]

அரச குமாரனுடன் இளைஞர்கள் பலர் சென்றிருந்தார்க ளல்லவா? அவர்களில் சிலர் படுகளத்திலே தப்பி வருகிறார்கள். அவர்களைக் கண்டதும், பிரேதங்களுக் கிடையே தேடிக் கொண்டிருந்த சில இளம் பெண்கள் தம் கணவர்கள் தப்பிப் பிழைத்தார்களே என்று எதிரெழுந்து அடி விழுந்து அழுது சோர் கின்றார்களாம். அப்போது அழகு மிக்க மாலை யணிந்த செம்பட்ட மயிர்க் கூந்தல் அங்கே பெருகி வருகின்ற இரத்தத்தோடு சேர்ந்து காண்கிறதாம்.

சோக ரஸமும் ஹாஸ்ய ரஸமும்

இப்படியே, தேடிக் கொண்டிருந்தவர்களெல்லாம் கணவர்களை எதிர்ப்பட்டிருக்கமுடியுமா? பிணங்களுக்கிடையே பிணங்களாகத்தான் பார்க்க முடிகிறது பலருக்கும். அப்போது என்ன நடக்கிறது?



நாடினர் நாடியே
நனைவருங் கொம்பனார்
வாடினர், கணவர்தம்
மார்புறத் தழுவியே
வீடினர்; அவ்வயின்
வெருவிவிண் ணவர்
கள்தாம்
ஓடினர் அரசன்மாட்
டணுகிநின்(று)
உரை செய்வார்.

[நாடினர் – தம் கணவரைத் தேடியவர்கள். நனைவரும்-அரும்புகள் தோன்றுகிற. கொம்பு அனர் – பூங்கொம்பு போன்ற பெண்கள். வீடினர் – தாங்களும் செத்துப் போனார்கள். அவ்வயின் – அப்பொழுது. வெருவி – பயந்து. விண்ணவர்கள் – தாம் அசோக வனத்திற்குக் காவலா யிருந்த பருவத் தேவர்கள். அரசன் மாடு – ராவண னிடம். அணுகி நின்று உரைசெய்வார்-

செய்தி சொல்வதற்காக வந்து நெருங்குகிறார்கள்.]

குழப்பங்களுக் கிடையே சாவோலை கொண்டு போகும் தேவர்களைக் கடைசி முறையாகச் சந்திக்கிறோம். இப்போது இவர்களுக்கு ஓலை வாசிக்கும் உத்தியோகமும் போய் விட்டது.

மகனுடைய மரணச் செய்தி ஏற்கெனவே சக்ரவர்த்திக்கு எட்டி விட்டது. அரண்மனை அழுகையும் அடிப்புமாயிருக்கிறது. பட்டமகிஷியான மண்டோதரியும் அழுகிறாள் :

கயல்மகிழ் கண்ணிணை
கலுழி கான்றுகப்
புயல்மகிழ் புரிகுழல்
பொடிய ளாவுற,
அயன்மகன் மகன்மகன்
அடியின் வீழ்ந்தனள்
மயன்மகள் வயிறலைத்(து)
அலறி மாழ்கினாள்.

[கயல் மகிழ் கண் இணை - கயல்மீன் போன்ற தன் இரண்டு கண்களிலிருந்தும். கலுழி கான்று உக - கண்ணீர் வழிந்து பெருக. புயல் மகிழ் - கருமேகத்தை ஒத்த. புரி குழல் - முறுக்கி விட்ட கூந்தல். பொடி அளாவுற - புழுதியிலே புரள. அயன் மகன் மகன் மகன் - பிரம்ம தேவனின் கொள்ளுப் பேரனான ராவணன். மயன் மகள் - அசுர சிற்பியான மயனது புதல்வியாகிய மண்டோதரி. வயிறு அலைத்து - வயிற்றில் அடித்துக் கொண்டு. மாழ்கினாள் - புலம்பினாள்.]

ராவண - மண்டோதரிகளின் இந்தக் கஷ்டம் ஒருபுறம் இருக்கட்டும் : தேவர்களைத்தான் விட்டதா கஷ்டம்? கஷ்டமான ஒரு கடமையிலிருந்து விடுபட்டவர்கள் இப்போது வேறொரு கஷ்டத்தில் சிக்கிக் கொள்கிறார்கள்.

துக்கம் விசாரித்து விட்டுத் 'தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம்' என்று ஓடிவிட வேண்டுமென்பது இவர்களுடைய கருத்து. ஆனால் சக்ரவர்த்தியிடம் துக்கம் விசாரிப்பதென்றால் எளிதான காரியமா?

எவ்வளவோ புத்தி சாலித்தனமாய் நடந்து கொள்வதாகத் தான் எண்ணம்! பக்கத்திலுள்ளவர்களைப் பார்த்து அப்படியே செய்வதென்று துணிந்து விட்டார்கள்.

மயன் மகள் வயிற்றில் அடித்துக் கொண்டு ராவணேச்வரன் காலில் விழுந்து கதறுவதையும் பார்த்து விட்டார்கள்; வேறு பெண்களும் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ராவணன் காலில் விழுந்து அலறுவதும் ஏங்குவதுமாயிருக்கிறார்கள். இது தான் இந்த ஊரில் துக்கம் விசாரிக்கும் முறை என்று துணிந்து விட்டார்களா, என்ன?

இந்தப் பெரிய உத்தியோகஸ்தர்கள் (காவல் மாத்தேவர்) என்ன செய்கிறார்கள்?

தாவரும் திருநகர்த்
தைய லார்முதல்
ஏவரும் இடைவிழுந் -
திரங்கி ஏங்கினர் ;
காவலன் கால்மிசை
விழுந்து, காவல்மாத்
தேவரும் அழுதனர் :
களிக்கும் சிந்தையார் !

[தாவரும் - வருத்தம் இல்லாத. ஏவரும் - எல்லாரும். இடை - இடத்தில் ; (இங்கே) பாதத்தினிடத்தில். காவலன் - சக்ரவர்த்தி. மா - பெருமை.]

தேவர்களும் அடித்து விழுந்து அலறத் தொடங்குகிறார்களே, என்ன ராஜ பக்தி! இந்த ராஜபக்தியின் இரகசியமும் கடைசியாக விளங்கி விடுகிறதல்லவா?

தேவரும் அழுதனர் ;
களிக்கும் சிந்தையார்.

இந்தத் தேவர்களே சம்புமாலி வதமானதும் ராவணனிடம் ஓடி வந்து 'ஐயா! நமரெல்லாம் உக்கார்' — அதாவது, நம்மவர்களெல்லாம் செத்துப் போனார்களே — என்று செய்தி சொன்னவர்கள். இப்படி உறவு கொண்டாடியவர்கள் — இப்பொழுதும் அட்ச குமாரனுக்காக அலறிப் புடைத்துப் புலம்புகிறவர்கள் —உள்ளுக்குள்ளே வருகின்ற களிப்பை முற்றும் அடக்கிவிட முடியவில்லையாம்.

காலில் விழுவதால்தான், இக்களிப்பை ராவணனுடைய இருபது கண்களாலும் பார்க்க முடியவில்லை! இவர்களைக் 'காவல் மாத்தேவர்' பெரிய காவல் தேவர்களான உத்தியோகஸ்தர்கள் — என்று கவிஞன் நினைவூட்டவும் தயங்கவில்லையே!

வெளியே அழுகை ; உள்ளே களிப்பு — இரட்டை வாழ்க்கை அடிமைகளுக்கு ; எந்த ராவண ராஜ்யத்திலும் இப்படித்

தான். இவ்வாழ்க்கை அடிமைகளை மட்டுமா கெடுக்கிறது?

'ஆளும் சாதி'யையும் வஞ்சித்துக் கெடுக்கிறது. (இந்த நிலைமைதான் இப்பொழுது நமது நாட்டில் இல்லையே!)

சோகம், கோபம், செருக்கு

அட்சன் வதமான செய்தி இந்திர ஜித்தின் செவியிலும் விழுகிறது. கண்கள் நெருப்புச் சிந்துகின்றன:

அவ்வழி அவ்வுரை
கேட்ட ஆண்தகை
வெவ்விழி எரிஉக
வெகுளி வீங்கினான்.

[அவ் வழி – அப்பொழுது. ஆண் தகை – ஆண்மைக் குணமுள்ள இந்திர ஜித்து. வெவ்விழி – தன் கொடிய கண்களிலிருந்து. எரிஉக – நெருப்புச் சிந்த. வெகுளி வீங்கினான் – கோபம் மிகுதியாகப் பெற்றான்.]

பழி வாங்கத் துடிக்கிறது வீர உள்ளம். ஓங்கி எழுகின்றான் உக்கிரத்துடன். 'கொலைக்குக் கொலை, இரத்தத்திற்கு இரத்தம்' என்று வெறியுடன் கர்ஜிக்கிறான்.

தம்பியின் கதியை நினைக்க நினைக்க என்ன கோபம், என்ன உணர்ச்சி – வெள்ளம்! ஆஹா, அது என்ன சிரிப்பு!

தம்பியை உன்னுந்
தோறும் தாரைநீர்
ததும்பும் கண்ணான்,
வம்பியல் சிலையை
நோக்கி வாய்மடித்(து)
உருத்து நக்கான்:
'கொம்பியல் மாய
வாழ்க்கைக் குரங்கினால்
குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான்,
எந்தை புகழன்றோ
தேய்ந்த(து)?' என்றான்.

[உன்னும் – நினைக்கும். வம்பு–வீண். சிலை – வில். உருத்து – கோபித்து. நக்கான் – சிரித்தான். கொம்பு – மரக் கொம்பு. குரங்கா – குறையாத. ஆற்றல் – வலிமை. எம்பி – என் தம்பி. எந்தை – என் தந்தை.]

இந்த ராணுவ மகாராஜ்யத்திலே தன் மதிப்பில்லாத பேடிகளாகி விட்டனர் அடிமைத் தேவர்கள். அரக்கர்களோ தன் மானத் தனி வீர வெறியர்களாய்க் காண்கிறார்கள்.

இதனால் தானே ராவணன், கிங்கரர் சம்புமாலி பஞ்சசேனாபதிகளையும் தன் இளம் பிள்ளையான அட்சனையும் கூடப் பலி கொடுக்கக் கூச வில்லை. இந்திரஜித்தும் தன் அருமைத் தம்பியின் அழிவைக் காட்டிலும் கௌரவத்தின் தேய்வையே பெரிதாகக் கருதுகிறான்.

இனி, இந்தக் கட்டுரையில் வந்திருக்கும் பாடல்களை மட்டும் பாடிப் பாடிப் பாருங்கள். எத்தகைய அதிசய மான தமிழிசை!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்த் தமிழ் மொழி ஆச்சரியமான கவிதா ரூபங்களைப் படைத்து வந்திருக்கிறது. இந்த ரூப சித்திரங்களெல்லாம், உயிர் நாடியான இசையும் தாளக்கட்டும் இசைந்து இரண்டறக் கலந்து பாட்டினூடே பாட்டின் ஆன்மாவாகப் பரந்து கிடப்பதின் விளைவு தான்.

இத் துறையில் பரிபூர்ண வெற்றி கம்ப சித்திரங்களுக்குத் தான் என்பது இன்றைய தமிழறிஞர்களும் அன்பர்களும் ரஸிகர்களும் நன்கறிந்ததே.



"...வீடெல்லாம் நன்னாத்தான் கட்டியிருக்கான். ஆனால் வாசப்படிகளை இன்னும் அகலமா வச்சிருக்கணும்..."

"அகலம் போதும்...உயரம் தான் போதாது!"

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

47. பனியிலும் புழுக்கமா?

ராவண ஏகாதிபத்திய கௌரவத்தின் முழுப் பாரமும் தன் தலைச் சுமையாகி விட்டது என்பது போன்ற உணர்ச்சியோடு தான் இந்திரஜித்து வருகிறான், அந்த ஏகாதிபத்திய உயிர்ச் சின்னமாகிய ராவணேசுவரனிடம். இந்த-வீரத் தந்தையை வீரமகன் சந்திக்கும்காட்சி எவ்வளவு உருக்கமாகவும் தத்ரூபமாகவும் சித்திரிக்கப்படுகிறது!

தந்தையும் மைந்தனும்

ராவணனைக் கண்டதும் இந்திரஜித்தின் சோகம் அதிகரித்து ஒரு கணம் கோபத்தை மறைக்கிறது. அழுது கொண்டே காலில் விழுந்த குல விளக்கான அருமைத் திரு மகனைத் தோளைப் பிடித்துத் தூக்குகிறான்.

தூக்கித் தழுவிக் கொண்டே அழுது சோர்ந்து போகிறான். அருகிலிருந்த தாயான மண்டோதரியும் மற்றப் பெண்களும் வயிற்றி லடித்து அலறிக் கொண்டு மயங்கி விழுகிறார்கள்.

அவர்களுடைய சோகத்தைக் கண்டதும், இந்திரஜித்து தன் சோகத்தை அடக்கிக் கொண்டு பெண்டுகளை விலக்கித் தந்தையிடம் பேசத் தொடங்குகிறான் ;

தாளினை விழுந்தான்,
தம்பிக்(கு) இரங்கினான்:
தறுக ணானும்
தோளிணை பற்றி
ஏந்தித் தழுவினன்,
அழுது சோர்ந்தான் :
வாளிணை நெடுங்கண்
மாதர் வயிறலைத்(து)
அலறி மாழ்க,
மீளிபோல் மொய்ம்பி —
னானும் விலக்கினன்,
விளம்ப லுற்றான்.

[இணை – இரட்டை. தறுகணான் – அஞ்சா வீரனான ராவணன். அலைத்து – அடித்து. மாழ்க – மயங்க. மீளி – சிங்கம். மொய்ம்பு – வலிமை :]

பக்கத்தி லிருந்து அப்படியே தான் நேரில் பார்த்து விட்ட மாதிரி வருணிக்கிறானல்லவா கவி? இந்திரஜித்து அந்த நிலையில் கோபத்தோடு பேசி விட்ட அந்தப் பேச்சையும் அப்படியே கேட்டுச் சொல்வது போலத் தான் அமைந்திருக்கிறது இந்தப் பாட்டும் :

'ஒன்றும் நீ உறுதி
ஓராய்! உற்றிருந்(து)
உளைய கிற்றி :
வன்றிறல் – குரங்கின்
ஆற்றல் மரபுளி
உணர்ந்தும் மன்னா!
"சென்றுநீர் பொருதிர்!"
என்று திறத்திறம்
செலுத்தித் தேயக்
கொன்றனை நீயே
அன்றோ, அரக்கர்தம்
குழுவை?' என்றான்.

[ஓராய் — ஆலோசிக்கவில்லை. உற்றிருந்து – துன்பம் அனுபவித்து. உளை

யகிற்றி – மனம் அழிந்து வேதனைப்படுகிறாய். மரபுளி – கிரமமாக. பொருதிர் – போர் செய்யுங்கள். திறம் திறம் – வரிசை வரிசையாக.]

குரங்கின் கொடிய வலிமையை ராவணன் அறிந்துதானே யிருக்கவேண்டும்? கடல் தாண்டி வந்து அசோகவனத்தை அழிக்கத் துணிந்த அந்தத் திறமையை அறிந்ததும் இந்திரஜித்தை யல்லவா அனுப்பி யிருக்க வேண்டும்?

அப்படிச் செய்யாமல், அரக்கர்களை வரிசை வரிசையாக அனுப்பி யிருக்கலாமா? ஒரு கொடிய பேய்த் தெய்வத்திற்கு வரிசை வரிசையாக ஆடுகளை அனுப்பிப் பலி கொடுத்தது போலல்லவா நேர்ந்து விட்டது?

இப்படிப் பேசும்போதே இந்திரஜித்தின் கோபம் பளிச்சென்று அனுமனை விட்டு ராவணன்மேல் பாய்கிறது. 'குரங்கா கொன்றது? ஐயோ! நீயல்லவா அநியாயமாய்க் கொன்று விட்டாய் அந்த அரக்கர் கூட்டங்களை யெல்லாம்!' என்றும் சொல்லிவிடத் தோன்றுகிறது.

இப்படி அந்தக் கொலைக் குற்றத்தைத் தந்தைமீது சுமத்தவும் துணிந்த மைந்தன், 'அட்சனையும் கொன்றுவிட்டு இன்னும் ஓடிப் போகாமல் நின்ற குரங்கை அப்படியெல்லாம் ஆடவிட்டு வேடிக்கை பார்த்திருக்கலாமா?' என்று குமுறுகிறான்.

இந்தப் பேச்சிலேயே பிரதாப லங்கேசுவரனுடைய அந்தப் பழைய திக்விஜயப் பிரதாபங்களையும் நினைவூட்டுகிறான்:


திக்கய வலியும்,
மேனாள் திரிபுரம்
தீயச் செற்ற

முக்கணன் கயிலை —
யோடும் உலகொரு
மூன்றும் வென்றாய்,

அக்கனைக் கொன்று
நின்ற குரங்கினை
ஆற்றல் காண்டி;

புக்(கு) இனி வென்றும்
என்றால், புலம்பன்றிப்
புலமைத் தாமோ?

[திக்கய வலியும் – எட்டுத் திக்கு யானைகளின் வலிமையையும். திரிபுரம் தியச் செற்ற – முப்புரத்தையும் எரியும்படி அழித்த. அக்கனை – அட்சகுமாரனை. ஆற்றல் காண்டி – (ஆட விட்டு நாடகம் பார்ப்பது போல மனம் போன போக்கெல்லாம்) வலிமை காட்டும் படிவிட்டு வேடிக்கை பார்க்கிறாயே. புக்க இனி – இனிப் போய். வென்றும் என்றால் –



வெல்வோமாயினும். புலம்பு அன்றி - (அந்த வெற்றிக்காகவும் நாம்) அழ வேண்டியதே அன்றி. புலமைத்து ஆமோ – அறிவுடைய செயல் செய்து விட்டோமென்று கருதப்படுவதாமோ.]

இப்படி வேறு யாராவது ராவணனி டம் சொல்லிப் பிழைக்கவா? ராவணேசு வரனை அவன் முன்னியிலேலேயே இப் படிக் கண்டித்துப் பேசும் இந்த இந்திரஜித்தோ, ராஜபக்தியிலாவது பிதாவின் பக்தியிலாவது குறைந்த வனில்லையே.

எனவே கடைசியாக, 'ஐயனே, நீ வருந்தவேண்டாம்: நீண்ட காலம் புக ழோடு வாழ்ந்திருப்பாயாக! அந்தக் குரங்கை நானே போய் வெகு விரைவில் சிரமமில்லாமல் பிடித்து உன் கையில் கொடுப்பேன்' என்று உறுதி கூறிப் புறப்படுகிறான் :

'ஆயினும் ஐய!
நொய்தின் ஆண்தொழிற்
குரங்கை யானே

ஏயெனும் அளவில்
பற்றித் தருகுவென் ;
இடர்என்(று) ஒன்றும்

நீ இனி உழக்கற் -
பாலை அல்லை; நீ(டு)
இருத்தி !' என்னுப்

போயினன், அமரர்
கோவைப் புகழொடு
கொண்டு போந்தான்.

[நொய்தின் - எளிதில். ஆண்தொழில் குரங்கை - ஆண்மைத் தொழில்கள் செய்திருக்கின்ற அந்தக் குரங்கை. ஏயெனும் அளவில் – மிகச் சுருங்கிய கால அளவிலே. உழக்கற்பாலை அல்லை - வருந்தத் தக்கவனில்லை. நீடு இருத்தி - நீண்ட காலம் இப்படியே ஏகாதிபதியாக நீவீற் றிருப்பாயாக. என்னு- என்று. அமரர் கோவை – தேவேந் திரனை. கொண்டு போந்தான்-கொண்டு வந்தவனை இந்திர ஜித்து.]



வீரத்தின்பன்மை தீர்ப்பான்

இத்தகைய இந்தி ரஜித்தைக் கவிஞன் பெரிய அரக்கர் சேனையின் நடுவில் போவதாகக் காட்டு

கிறான். 'வீரத்தின் பன்மை தீர்ப்பான்' என்று சுட்டிக் காட்டுகிறான். வீரம் பன்மையாயிருந்ததாம், இந்திரஜித்து தோன்றிப் பிரசித்தி பெறுவதற்கு முன்பு. இப்பொழுதோ வீரத்திற்கு ஒருவன்; ஆம், இந்திரஜித்தேதான்—என்று உலகம் அறிந்து கொண்டிருக்கிறதாம்.

இப்படிப்பட்ட இந்திரஜித்தே படுகளம் கண்டதும் அனுமனுடைய வீரத்தைப் புகழ்ந்து கொண்டே போகிறான். வீரனை வீரன்தானே அறிவான்?

> சென்றனன் என்ப
> மன்னோ : திசைகளோ(டு)
> உலகம் எல்லாம்
>
> வென்றவன் இவன்என் –
> றுலும் வீரத்தே
> நின்ற வீரன்,
>
> 'அன்றது கண்ட
> ஆழி அனுமனை,
> அமரின் ஆற்றல்
>
> நன்(று)!'என உவகை
> கொண்டான்! யாவரும்
> நடுக்கம் உற்றார்.

[ஆழி – சமுத்திரம்; இங்கே வீர சமுத்திரம். நின்ற – நிலை பெற்ற. அமர் – போர்.]

எத்தனையோ அரக்கர்களைக் கொன்றொழித்துத் தன் தம்பியையும் தந்தை புகழையும் ஒருங்கே தேய்த்தழித்த அனுமனைக் குறித்தல்லவா இப்படி உவகை கொள்கிறான்? 'தங்களுக்குச் சரியான எதிரி கிடைக்கும்போது இப்படி ஒருவகை உக்கிர உவகை உணரப் படுவதாகும் போர். வீரர்களால்' என்கிறார் ஓர் ஆங்கிலக் கவி. கம்பனோ அதற்கும் மேலே போய்,

> நன்றென உவகை
> கொண்டான்; யாவரும்
> நடுக்க முற்றார்.

என்று இந்த உவகையையும் நடுக்கத்திற்கு நடுவே காட்டுகிறான்.

போர்க்களத்தைப் பார்த்ததும் இந்திரஜித்துக்கு அது இலங்கையின் பகுதியென்றே தோன்றவில்லை:

> இலைகுலாம் பூணி –
> னுனும், ' இரும்பிணக் –
> குருதி ஈரத்(து)
> அலகில்வெம் படைகள்
> தெற்றி அளவிடற்(கு)
> அரிய வாகி
> மலைகளும் கடலும்
> யாறும் கானமும்
> பெற்று, மற்(று) ஓர்
>
> உலகமே ஒத்த
> தம்மா போர்ப்பெருங் –
> களம்!' என்(று) உன்னு —

[இலைகுலாம் பூணினுனும் – இலைவடிவமான வேலைப்பாடுகள் அமைந்த ஆபரணங்களையுடைய இந்திரஜித்தும். இரும்பிணக் குருதி ஈரத்து – மிகுதியான பிணங்களையுடைய இரத்தப் பெருக்கிலே. அலகில் வெம்படைகள் தெற்றி – அளவில்லாத கொடிய ஆயுதங்கள் அலைக்கப்படுவதால். யாறும் – ஆறும். உன்னு - உன்னி; எண்ணி.]

அஞ்சா நெஞ்சினனும் சிறிது ஏங்க வேண்டியது தானே இந்த அதிசய கோரங்களைக் கண்டு. இந்த ஆயுதக் காடு, பிணமலை, இரத்த ஆறு முதலியவற்றைக் கண்டதும் 'யுத்த காண்ட'மே நினைவிற்கு வந்து விடுகிறதாம் இந்திரஜித்துக்கு.

'ஒரே குரங்கு இந்தப் பாடு படுத்தினால்...... இனி ராமன் வந்து எதிர்த்தால்...' என்றெல்லாம் நினைவுகள் எதிர்நோக்கி ஓடுகின்றன.

ஏன் இந்தப் புழுக்கம்?

தாபமோ தவிப்போ இதுவரையிலும் இல்லாத இந்த வீர நெஞ்சிலும் சிறிது ஏக்கம் ஏற்படுகிறதே, கவலை ஏற்படுகிறதே! கம்பனே காட்டவேண்டியது தான், அந்த அகத்தோடு சிந்தனை தோய்ந்த முகத்தையும்:

> வெப்படை கில்லா
> நெஞ்சில் சிறியதோர்
> விம்மல் கொண்டான்;
>
> 'அப்படை வேலை
> அன்ன பெருமையர்
> ஆற்ற லோடும்
>
> ஒப்படை கில்லார்
> எல்லாம் உலந்தனர் -
> குரங்கும் ஒன்றே!
>
> எப்படை கொண்டு
> வெல்வ(து) இராமன் வந்(து)
> எதிர்க்கின்?' என்றான்.

[வெப்பு – வெப்பம். வேலை – சமுத்திரம். ஒப்பு – உவமை; ஈடு. அடைகில்லார் – பெறுதவர்கள். உலந்தனர் – அழிந்தார்கள்.]

சுந்தர ராமாயணம்



48. இடறும் நினைவுகள்

இறந்த காலமும் நிகழ் காலமும் எதிர் காலமும் மாறி மாறிப் படக் காட்சிகளாகின்றன மனத் திரையிலே. இவற்றுக்கிடையே இரண்டு சித்திரங்கள்.

பின்னோக்கி ஓடும் நினைவுகள்

அரக்கர் பயத்தால் தண்டகாரணியமே கிடு கிடென்று நடுங்கிக் கிடந்த காலம். அந்த முனிவர்கள் காணத் தன் அத்தையான சூர்ப்பணகைக்கு அங்க பங்கம் ஏற்படவில்லையா?

சூர்ப்பணகைப் பிராட்டியின் பாடு இது வென்றால் சிற்றப்பாவான கரனார் பட்ட பாட்டைத் தான் என்னென்பது? அவள் கதையாவது மூக்கோடு முடிந்தது!

தண்டகாரணியத்திலே வேத கோஷமும் வேத வேள்விகளும் நடைபெறாமலிருக்கவும், அந்த அந்தணர்கள் அந்தண்மை இழக்கவும், பஞ்சவடியிலும் பக்கத்துக் காடுகளிலும் தன் இச்சையே சட்டமாகப் பம்பரம் போலச் சுழன்று கொண்டிருந்த சூர்ப்பணகையாளுக்கு ஓர்அரணாகவும் இருந்தார்கள் கரன் முதலான காளை வீரர்கள்.

நெடிய குன்றுகளும் பெரிய பெரிய மரங்களும் உள்ள காட்டிலே எத்தகைய சண்டமாருதங்களாலும் அசைக்க முடியாத ஆலமரம் போலவும் குன்றுகள் போலவும் நின்றதாம் கரனார் சேனை.

அந்தக் கூட்டத்திற்குத்தான் என்ன போர்த் தினவு! போர்ப் பறைகளை எப்படி முழக்கிக்கொண்டிருந்தார்கள்! எவ்வளவு இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தார்கள்! அந்த ஆரவார ஆவேசங்களெல்லாம், அந்த அட்டகாச ஆர்ப்பாடங்களெல்லாம் எங்கே இப்போது?

இப்படி அத்தையும் சிற்றப்பாவும் 'எண்ணாத எண்ண'ங்களையெல்லாம் தோற்றுவிக்கிறார்கள் இந்திரஜித்தின் இதயத்திலே. போகட்டும்: அதே விதி இப்போது தன் செல்லத் தம்பிக்கும் வந்து விட்டதே, காரணம் என்ன? கவிஞன் ஏற்கெனவே குறிப்பாகக் காட்டியிருக்கிறான்.

அட்சகுமாரன் மிக்க ஆடம்பரத்துடன் அனுமன்மீது படையெடுத்து வரும்போது 'கணக்கில் காலம்— சேகுற வினையிற் செய்த தீமையும் தொடர்ந்து செல்ல' என்று ஏற்கெனவே வருணித்திருக்கிறானல்லவா? ஆனால் அந்தத் தீவினைதான் தம்பி முதலானவர்கள் மாண்டொழிந்ததற்குக் காரணம் என்பதை இந்திரஜித்து அறிந்து கொள்ளவில்லை.

எய்தவன் இருக்க அம்பை நோவது போல் இந்திரஜித்து, வானரமும் இதை அனுப்பி வைத்த மானிடர் இருவரும் காரணம் எனக் கருதுகிறான். தன்னையும் வெறுத்துக்கொள்கிறான்.

அந்த மானிடரும் வானரமும் விதியின் கைக்கருவிகள் என்பதும், அந்த விதி அரக்கர்களாலேயே உருவாகியது என்பதும் இந்திரஜித்தின் வேதாந்தத்திற்கு அப்பாலுள்ள விஷயங்கள். எனவே.

'கானிடை அத்தைக்(கு)
உற்ற குற்றமும்,
கரனார் பாடும்,
யானுடை எம்பி
வீந்த இடுக்கணும்,
பிறவும் எல்லாம்,

மானுடர் இருவ
ராலும் வானரம்
ஒன்றி னாலும்

ஆனிடத்(து) உளஎன்
வீரம் அழகிற்றே,
அம்ம !' என்றான்.

[யானுடை எம்பி—நான் உடைமையாக மதித்த தம்பி. வீந்த—செத்த. இடுக்கண்—துன்பம். ஆனிடத்து—ஆன இடத்து: ஆயின என்றால். அழகிற்று—அழகுடையது.]

நனவா, கனவா?

நினைவுகள் இப்படிப் போய்க் கொண்டிருக்க, இந்திரஜித்தின் தேரும் போய்க் கொண்டே தானிருக்கிறது. திடீரென்று அந்தச் சக்கரங்களை இடறித் தடுக்கிறது ஒரு பிணக் குவியல்.

அந்தப் பிணக் குவியலை இரத்த வெள்ளம் இழுத்துப் போக முயன்றும் முடியவில்லை. அப்பிணங்களிடையே அந்த ஓர் உடம்பின் நிலைதான் இந்திரஜித்தை என்ன பாடு படுத்துகிறது!

ஏற்கெனவே ஏற்பட்ட உணர்ச்சி நிலைகளுக்கெல்லாம் அதீதமாக இப்படியும் ஒரு நிலையா? காட்சியா?

நீப்புண்ட உதிர
வாரி நெடுந்திரைப்
புணரி தோன்ற
ஈர்ப்(பு) உண்டற்(கு)
அரிய
வாய பிணக்குவ(டு)
இடறிச் செல்வான்,
தேய்ப்புண்ட தம்பி
யாக்கை, சிவப்
புண்ட
கண்கள் தீயில்
காய்ப்புண்ட செம்பின்
தோன்றக் கறுப்புண்ட
மனத்தன் கண்டான்.

[நீப்புண்ட—நீங்குதல் அடைந்த. உதிர வாரி—இரத்த நீராலாகிய. நெடுந்திரைப் புணரி—பேரலை கொண்ட கடல். தோன்ற—உண்டாக, அதனால். ஈர்ப்பு உண்டற்கு அரிய ஆய—இழுக்கப்படுவதற்குக் கூடாதன ஆகிய. பிணக்குவடு—பிணக்குன்று போன்ற குவியல். செல்வான்—செல்பவனான இந்திரஜித்து. தேய்ப்பு உண்ட—தேய்க்கப்பட்டுள்ள. யாக்கை—உடம்பை. சிவப்பு உண்ட கண்கள்—கோபத்தினால் சிவந்த தன்னுடைய கண்கள். தீயில் காய்ப்பு உண்ட செம்பில் தோன்ற—தீயில் காய்ச்சப்பட்ட செம்பு போலத் தோன்ற. கறுப்பு உண்ட மனத்தன்—கோபங்கொண்ட மனத்தனாகி.]

தாருகன் என்ற அசுரனை முருகக் கடவுள் வதைத்த கதையைக் கேட்டிருக்கிறான் இந்திரஜித்து. அந்தத் தாருகாசுரனுடைய உடம்பிலிருந்து பெருகிய இரத்தப் பெருக்கையும் புராணம் வருணிக்கக் கேட்டிருக்கிறான்.

நரசிங்கமூர்த்தி கூரிய நகத்தால் கீறிக் கிழித்து அளையவே இரணியனது



உடம்பு குழம்பிக் கிடந்தது என்பதை
யும் விவரமாய்க் கேட்டிருக்கிறான். 'புரா
ணப் பொய் மூட்டைகள்' என்றே கருதி
யிருக்க வேண்டும்.

அந்தக் கதைகளிலே பெருகிய இரத்
தப் பெருக்கையும், குழம்பிக் கிடந்த
உடம்பையும் இப்போது கண்ணெதிரே
கண்டு கொள்கிறான். அந்தப் புராண



அசுரர்களின் கதி தன் தம்பிக்கே வந்து
விட்டது, ஐயோ!

தாருகன் குருதி
  அன்ன குருதியில்,
  தனிமாச் சீயம்

கூருகிர் கிளைத்த
  கொற்றக் கனகன் மெய்க்
  குழம்பித் தோன்ற, —

அந்த இரண்டு தோற்றங்களையும் இப்
போது ஒருங்கே கண்டது போலக்
காண்கிறான் தம்பியை!

தந்தையின் தேய்ந்த புகழ் போலப்
பரிதாபமாய்க் கிடக்கும் இந்தத் தம்பி
யின் நிலையை எப்படியோ வருணித்து
விடும் கவிஞன், இந்த நிலையைக் கண்
ணால் கண்டு விட்ட இந்திரஜித்தின்
நிலையை எப்படித்தான் வருணிக்கப்
போகிறானோ?

இதோ பாருங்கள்; கையோடு கையாய்ச்
சேர்ந்திருக்கும் அந்த வீர வில்லும்
நழுவி விடுகிறது. அந்தச் சிவந்த கண்
களிலிருந்து கண்ணீர் மட்டுமின்றி இரத்
தமும் சிந்துகிறது; நெருப்பும் சிந்து
கிறது! தான் வீற்றிருந்த தேரும்
தன்னை அந்தரத்தில் விட்டு விட்டு
எங்கேயோ அதல பாதாளத்தில்
நழுவி விடுவது போலத் தோன்றுகிற
தாம்:

தேருகக், கையின்
  விரச் சிலையுக,
  வயிரச் செங்கண்

நீருகக், குருதி
  சிந்த நெருப்புக
  வயிர்த்துநின்றான்.

[உக - உதிர; நழுவி
விழ. வயிர்த்து - வயிரம்
கொண்டு.]

எனினும் அந்தக் கண்
களிலே வயிரம் பாய்ந்த
உள்ளம் அப்படியே
பிரதிபலிக்கிறது: அந்த
வயிரம் உடம்பிலும் அப்
படியே பிரதி பலிக்
கிறது!

என்றாலும் என்ன?
அந்த உணர்ச்சி வெள்
ளம் இப்போது அணை
யையும் உடைத்துக் கரை
யையும் கரைத்து விடு
கிறது:

வெவ்விலை அயில்வேல்
  உந்தை வெம்மையைக்
    கருதி நோக்கி,
வவ்வுதல் கூற்றும்
  ஆற்றான்; மாறுமா(று)
  உலகின் வாழ்வார்
அவ்வுல கத்து—
  ளாரும் அஞ்சுவர்
  ஒளிக்க ஐயா!
'எவ்வுல கத்தை
  உற்றாய், எம்மை நீத்(து)
  எளிதின் எந்தாய்?'

[வெவ் இலை அயில் வேல் – அச்சம்
தருவதும், இலை வடிவமாயிருப்பது
மான கூரிய வேலாயுதம். உந்தை –
உன் தகப்பன். வவ்வுதல் – கவர்தல்.
மாறு மாறு—இன்னம் வெவ்வேறான.
நீத்து – விட்டு. எளிதின் – லேசாக.]

இவ்வளவு வைரம் பாய்ந்த நெஞ்சி
லும் எவ்வளவு சகோதர பாசம் குடி

கொண்டிருக்கிறது பாருங்கள்! இந்தச் சோகத்தை இந்திரஜித்தாலும் தாங்க முடியவில்லை. நிலை கலங்கி அறிவு மயங்கிச் சோர்கின்றான்.

ஆனால் மகாவீரனல்லவா? சீற்றம் சோகத்தை உதைத்துத் தள்ளி விடுகிறது,—உள்ளுக்குள்ளேதான். அப்படி உள்ளே யிருந்து சோகம் வீரத்தைப் பலவீனப் படுத்தப் போகிறதா?

ஆணி மேல் ஆணி அடிப்பதுபோலத் தான் இருக்கிறதாம், சீற்றம் அடித்துச் சோகத்தைக் கீழே தள்ளுவதும்:

ஆற்றலன் அனைய
 னாகி அறிவழிந்(து)
 அயரும் வேலை
சீற்றமென்(று) ஒன்று
 தானே மேல்நிமிர்
 செலவிற் றாகித்
தோற்றிய துன்ப
 நோயை உள்ளுறத்
 துரந்த தம்மா!
ஏற்றஞ்சால் ஆணிக்(கு)
 ஆணி எதிர்செலக்
 கடாய தென்ன.

[ஆற்றலன் அனையனாகி - அவன் பொறுக்க மாட்டாதவனாகி. அயரும் வேலை — அயர்ந்து போகும் சமயத்தில். மேல் நிமிர் — மேன்மேல் நிமிர்த்தெழும். செலவிற்று ஆகி - போக்கையுடையதாகி. துரந்தது அம்மா - செலுத்தி அடக்கி விட்டது. ஏற்றம் சால் — ஏறும் தன்மை பொருந்திய. செல - செல்ல. கடாயது என்ன - அறைந்தாற்போல.]

சற்றுமுன் வயிர உள்ளத்தையும் பிளக்க முயன்ற சோகம், இப்போது கோபாவேசத்திற்கும் வீராவேசத்திற்கும் அடிப்படையாக அமைந்து அவற்றை உறுதிப்படுத்துகிறது.

இந்திரஜித்தும் அனுமனும்

இந்த நிலையில் ஒரு வீர சூரியனைப் போல ஜொலிக்கிறான். தேரை முடுக்குகிறான் சாரதி. அனுமனையும் முடுக்கிக் கொண்டுதானிருக்கிறதாம் சீற்றம்:

ஈண்(டு) இவை நிகழ்உழி,
 இரவி தேரெனத்
தூண்டுறு தேரின்மேல்
 தோன்றும் தோன்றலை,
மூண்டுமுப் புரம்சுட
 முடுகும் ஈசனின்
 ஆண்தகை வனைகழல்
 அனுமன் நோக்கினான்.

[ஈண்டு — இவ்விடத்தில், நிகழ்உழி — நடக்கும்போது. இரவிதேர் என — சூரியனது தேர் போல. தூண்டுறு — தூண்டப்பட்டு விரைந்து வருகிற. தோன்றலை — ராவண குமாரனை இந்திரஜித்தை, மூண்டு — கோபம் மூண்டவனாய். முடுகும் — விரைந்து நெருங்கிய. ஈசனின் — சிவபிரான் போன்ற. வனைகழல் — கட்டிய வீரக் கழலையுடைய.]

இந்திரஜித்தின் வீரப் பெரும் பொலிவும் முகத்திலே தோன்றிய திட சங்கற்பமும் அனுமனையே பிரமிக்கச் செய்கின்றன. 'இனி வெற்றியோ தோல்வியோ இரண்டில் ஒன்று சமீபித்து விட்டது!' என்று தனக்குள் தானே சொல்லிக்கொள்கிறான் அனுமன்.

இவன் இந்திரஜித்தாகவே இருக்கக் கூடும் என்று கூட ஊகிக்கிறான். 'ஊர் தேடு படல'த்தில் அனுமன் இந்திரஜித்தின் வீட்டு வாசலை அடைந்து உட்புகுந்து உறங்கிக் கொண்டிருந்த இந்திரஜித்தைப் பார்த்துப் போனதாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். அப்போது,

யாவனோ அறியேன்

என்று தான் சொல்லிப் போனான்.

இந்திரஜித்து விழித்துக் கொண்டு இப்போது போருக்கு வரும்போது தான்,

இவன் இந்திர சித்து
 என்பான்

என்று தீர்மானிக்கிறான்.

அப்போதும் அந்த உருவத் தோற்றம் கண்டு அனுமன் பெரு மதிப்புக் கொண்டான், 'இத்தகைய ஒரு மகா வீரன் போர்த்துணையா யிருக்கும்போது ராவணன் திக்விஜயம் செய்தது ஒரு பெருங்காரியமன்று' என்றே மதித்து விட்டான்.

'இளைய வீரனும் ராமனும் ஆகிய இருவரையும் மன முளையச் செய்யப் போகிறான் இந்த வீரன்' என்று கூட எண்ணமிடுகிறான். எனினும் அப்போது 'இவன் இந்திரஜித்து' என்று கண்டு கொள்ளவில்லை. இப்போதோ இந்திரஜித்தைக் கண்டு பிடித்ததோடு இவனைக் கொன்று விடலாம் என்று கூட மனோராஜ்யம் செய்கிறான்.

சுந்தர ராமாயணம்



49. வீர சம்பாஷணை

'வெற்றியோ, தோல்வியோ, இரண்டிலொன்று இன்று நெருங்கி விட்டது' என்று கருதிய போதிலும் அனுமனுக்குச் சிறிதும் தன் வலிமை குறித்து அவநம்பிக்கை ஏற்படவில்லை. தன்னம்பிக்கை குறைவதற்கு மாருக அதிகரிப்பதாகவே தோன்றுகிறது.

'இந்திரஜித்து இறந்து விட்டால் அதுவே ராவணனுக்கும் வீழ்ச்சியாகும்' என்ற நினைப்பு, தன்னம்பிக்கையை மேன்மேலும் தூண்டி விடுகிறது. ராவணன் சீதையைக் கொணர்ந்து விட்டுச் செல்வதும் சாத்தியமாகுமென்றே நினைத்து விடுகிருன்.

இப்படி ராமாயணத்தைச் சுந்தர காண்டம் பூர்த்தியாவதற்கு முன்பே சம்பூர்ண ராமாயணமாக முடித்து விடலாமென்று அனுமன் கருதுகிற மன நிலையை உணர்ந்து கொள்ள முயல்வோம் :

கட்டே றுநறுங்
கமழ்கண்ணி இக் காளை
என்கைப்

பட்டால் அதுவே
அவிராவணன் பாடும்
ஆகும்:

கெட்டேம் எனஎண்ணிஅக்
கேடருங் கற்பி —
னளை

விட்டே கும்; அதன்றி
அரக்கரும் வெம்மை
தீர்வார்.

[கட்டு ஏறும் – பூக்களால் கட்டிய. நறுங்கமழ் கண்ணி – மிக்க மணம் வீசுகிற மாலை. இக்காளை–இந்த இளவீரன். என் கைப்பட்டால்–என் கையால் அழிந்தால். அவிராவணன் – அவ் இராவணன். பாடும் – (இங்கே) கேடும். கெட்டேம் – கெட்டோம். கேடு அருங்கற்பினளை – கெடுதல் இல்லாத கற்புடைய சீதையை. வெம்மை – (இங்கே) கொடுமை.]

இப்படியெல்லாம் அனுமன் 'மனோ ராஜ்யத்திலும் பாதி ராஜ்யமா?' என்றவாறு ஆலோசித்துக் கொண்டிருக்கும் போதே அரக்கர்கள் போர் தொடங்கி அனுமனை எதிர்க்கிருர்கள் :

அக்காலை, அரக்கரும்
ஆனையும் தேரும்
மாவும்,

முக்கால் உலகம்ஒரு
மூன்றையும் வென்று
முற்றிப்

புக்கா னின்முன்
புக்கு(உ)யர்பூசல் பெருக்கும்
வேலை,

மிக்கானும் வெகுண்டொர்
மராமரங் கொண்டு
புக்கான்.

[அக்காலை – அப்பொழுது. மாவும் – குதிரைகளும். முக்கால் – மூன்று தடவையாக. புக்கானின் முன்புக்கு – வந்தவனை இந்திரஜித்துக்கு முன்னே வந்து. உயர் பூசல்–மிகுதியான ஆரவாரங்களை. பெருக்கும் வேலை – அதிகரிக்கச் செய்யும் வேளையில். மிக்கானும்–பெரியோனாகிய அனுமனும்.]

இந்திரஜித்துடன் வந்திருக்கும் சதுரங்க சேனைகளும் முன்பு வந்த அரக்க

சேனைகளைப் போலவே சுலபமாக அழிக்கப்படுகின்றன. உதைத்தும் மிதித்தும் உருட்டியும் தள்ளியும் எத்தனை யானைகளை யுத்தரங்கத்திலே சாய்த்து விடுகிறான்!

தேர்கள் எத்தனை முறிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் ஒடிக்கப்பட்டும் சாய்க்கப்பட்டும் அழிகின்றன! குதிரைகள் எத்தனை தலைநெரிந்து கண்மணி சிதைந்து முதுகொடிந்து இரத்தம் கக்கிய வண்ணம் கிடக்கின்றன! இந்த வாகனங்களில் ஏறி வந்தவர்களும் சின்ன பின்னமாகி அழிந்து போகிறார்கள்.

போருக்கு முன் ஒரு சொற்போர்

இந்த நிலையில் இந்திரஜித்து அநுமனை நெருங்குகிறான், சிரிப்பும் கோபமுமாக:

தேரும் யானையும்
புரவியும் அரக்கரும்
சிந்திப்

பாரின் வீழ்தலும்,
தான் ஒரு தனி நின்ற
பணைத்தோள்

வீரர் வீரனும்,
முறுவலும் வெகுளியும்
வீங்க,

'வாரும், வாரும்!' என்(று)
அழைக்கின்ற அநுமன்
மேல் வந்தான்.

[புரவியும் — குதிரைகளும். பாரின் — தரையில். ஒரு தனி நின்ற — ஒருவன் மாத்திரமே தன்னந் தனியனாக நின்று. பணைத் தோள் — பருத்த தோள்களை யுடைய. முறுவலும் — சிரிப்பும்.]

அநுமனுடைய யுத்த உத்ஸாகத்தை எவ்வளவு தெளிவாய்க் காண்கிறோம், தன்மேல் வருகின்ற இந்திரஜித்தை 'வாரும், வாரும்!' என்று ஏதோ ஒரு விருந்துக்கு அழைப்பது போல் அழைக்கும் போது. அநுமன் இப்படி அழைத்ததும், இந்திரஜித்துக்கோ சிரிப்பும் கோபமும் பொங்கி வருகின்றன. பருத்த வீரத் தோள்கள் மேலும் பூரிக்கின்றன.

வீரர் வீரனும்,
முறுவலும் வெகுளியும்
வீங்க,



'வாரும், வாரும்' என்(று)
அழைக்கின்ற அனுமன்மேல்
வந்தான்

என்ற அடிகளில், இரண்டு மகாவீரர்களை யும் கவிஞன் அப்படியே கண்டு காட்டு வது போல் தோன்றுகிறது.

வில் நாணியை விரலால் தெறித்து இந்திரஜித்து டங்காரம் செய்ததும் அனுமன் தோள் கொட்டி வரவேற் கிருன், பிறகு இரண்டு வீரர்களும் வீர வாதம் செய்கிருர்கள்.

இந்த வீரவாதத்தின் சிறப்பைத்தான் என்னென்று சொல்வது? இரு வீரர் களின் குணசித்திரங்களும் நிறம்பெற்று இங்கே தம்மை வெளியிட்டுக் கொள்வ தற்கு இந்த வீரவாதம் இன்றியமையா தது.

முதன் முதல் இந்திரஜித்து வீரவாதஞ் செய்கிருன். எப்படி?

'நல்லவன்; நீ மிகவும் நல்லவன். இந்த உலகத்திலே உன்னைப்போல நல்லவர்கள் இல்லை!' என்கிருன் இந்திர ஜித்து. நல்லது, தம்பியைக் கொன்ற வன் எப்படி நல்லவனுகிருன்!

ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றிலே யூத வணிகனுகிய ஷைலக் வெனிஸ் வர்த்த கனைக் கொழுத்த புள்ளி என்று கண்ட தும் அவனை 'நல்லவன்' என்று சொல்லு கிருன். கடன் கொடுத்து அதிக வட்டி யும் முதலுமாக வாங்குவதற்கு நல்ல புள்ளி என்பது கருத்து.

இத்தகைய நோக்குடன் பாருங்கள், இந்திரஜித்தின் வீரவாதத்தை:

'நல்லை, நல்லை இஞ்
ஞாலத்துள்
நின்னெக்க
நல்லார்
இல்லை, இல்லையால்
எறும்வலிக்(கு);
யாரொடும்
இகல
வல்லை வல்லை, இன்(று)
ஆகும் நீ படைத்துள
வானுட்(கு)
எல்லை, எல்லை!' என்(று)
இந்திர சித்துவும்
இசைந்தான்.



[நல்லே — நீ மிகவும் நல்லவன். இஞ்ஞாலத்துள் - இந்த உலகத்தில். நின் ஒக்க - உனக்குச் சமானமாக. எறும் வலிக்கு - மிக்க வலிமையில். யாரோடும் இகல வல்லே வல்லே—எவ்வளவு திறமையுள்ளவரோடும் நீ போர் செய்ய மிகவும் வல்லவன்தான். படைத்துள வாளுக்கு - பெற்றிருக்கிற வாழ் நாளுக்கு. இசைத்தான் - சொன்னுன்.]

'மிக்க வலிமைக்கு நல்லவன் ; யாரோடும் போராட நல்லவன்' என்று அனுமனைப் பாராட்டிய இந்திரஜித்து, 'அப்பேர்ப்பட்ட உன்னுடைய வாழ் நாளுக்கும் எல்லே வந்து விட்டது இன்று!' என்று வீரம் பேசுகிறுன். இதற்கும் மேலாக அனுமன் செய்யும் வீர வாதத்தையும் கேட்போம்.

வாழ்நாளுக்கு மட்டுமின்றி அவர்களுடைய கொடுந் தொழிலுக்கும், அவர்கள் நம்பியிருக்கும் ஆயுதபலத்திற்கும் எல்லே வந்து விட்டது என்கிருன் அனுமன். பலாத்காரத்தைக் கொண்டு உலகத்தை ஹிம்ஸிக்கும் அந்தக் கொள்கைக்கே எல்லே வந்து விட்டது என்றும் சொல்லி விடுகிருன் :

'நாளுக்(கு) எல்லேயும்,
நிருதராய் உலகத்தை
நலியும்
கோளுக்(கு) எல்லேயும்,
கொடுந்தொழிற்(கு) எல்லே
கொடியிர்! [யும்,
வாளுக்(கு) எல்லேயும்
வந்தன : வகைகொண்டு
வந்தேன் :
தோளுக்(கு) எல்லேஒன்(று)
இல்லே!' என்(று) அனுமனும்
சொன்னுன்.

[நிருதர்-ராட்சஸர். நலியும்—வருந்துகிற. கோள் - கொள்கை. கொடு - கொண்டு.]

மிக்க தோளாற்றல் வாய்ந்த அனுமனுடைய வாழ்நாளுக்கு எல்லே வந்து விட்டது, இந்திரஜித்தின் வடிவத்திலே என்பது வாதியின் வாதம். அரக்கர்களின் ஹிம்ஸைக் கொள்கைக்கும் அதன் அறிகுறியான வாளுக்கும் எல்லே வந்து விட்டது என்பது பிரதிவாதியின் திட நம்பிக்கை.

இதற்கு மேலாக வாதி வாதஞ்செய்ய விரும்பவில்லே. 'அந்த உறுதியான நம்பிக்கையை (சிரத்தையை)த் தொலேத்து விடுவேன், அந்த மூளேயிலிருந்தும் அந்த நெஞ்சிலிருந்தும்' என்கிருன் இந்திரஜித்து.

இப்படி ஒன்றும் வாய்விட்டுச் சொல்லிவிட வில்லே. தனக்குள் தானே பேசிக் கொள்கிருன். இனி அனுமனேடு பேசப் போவது அம்பு தான்!

இந்திரஜித்தின் ஆத்திரத்தையும் ஆருத சினத்தையும் பாட்டின் ஓசையே அழுத்திப் பேசுகிறது :

இச்சி ரத்தையைத்
தொலேப்பென்என்(று) இந்தி
பகைஞன் [ரன்
பச்சி ரத்தம்வந்(து)
ஒழுகிட, வானவர்
பதைப்ப,
வச்சி ரத்தினும்
வலியன வயிரவான்
கணைகள்
அச்சி ரத்தினும்
மார்பினும் அழுத்தலும்,
அனுமன்,—

[இச்சிரத்தையை - இவ்வளவு தைரியமாகப் பேசும் இந்தக் குரங்கின் தன்னம்பிக்கையை. பச்சிரத்தம் — புதிய இரத்தம். வச்சிரத்தினும் வலியன வயிரவான் கணைகள் - வைரத்தைக் காட்டிலும் வலிமையுள்ள வைரம் என்று சொல்லும் படி அவ்வளவு சக்தியுள்ள பெரிய அம்புகளால். அச்சிரத்தினும் மார்பினும் - அவ்வளவு திடமாகப் பேசிய அந்தத் தலே மேலும், நெஞ்சுக் கூட்டின்மேலும்.]

அனுமன் மூளேயையும் நெஞ்சையும் அழுத்தி அங்கே குடி கொண்ட திட நம்பிக்கையைத் தொலேத்துப் போடுவதாக அம்புகளே இந்திரஜித்து ஏவத் தொடங்கியதும், அந்த நம்பிக்கை அப்படியே அழுத்தப்படுவதற்கு மாருகப் பெருவடிவம் கொண்டு நிமிர்கின்றதாம், — அனுமனுடைய நெடுஞ்சினத்தையே துணையாகக் கொண்டு.

அனுமன் வானுற ஓங்கி வளர்கிருன் ; விசுவரூபம் கொள்கிருன். திடீரென்று இந்திரஜித்து அம்புகளால் தலேயிலும் மார்பிலும் அடிக்கத் தொடங்கியதும் நெடுஞ்சினம் வந்து விடுகிறது அனுமனுக்கு. அந்த நெடுஞ்சினத்திலே வடிவமும் நீண்டு நிமிர்கின்றதாம்.

இத்தகைய உணர்ச்சி நிறைந்த கட்டங்களில் உயர்வு நவிற்சியைக் கொண்டும் தன் சித்திரத்தை உருவாக்கக் கவிஞன் பின் வாங்குவதில்லை; தன் மனோபாவத்தை வெளியிடத் தயங்குவதில்லை.

ஆறு அடி உயரமுள்ள மனிதனொருவன் ஒரு குடிசைக்குள்ளே குனிந்து தான் நுழைந்தான்; அடக்க ஒடுக்கமாகத் தானிருந்தான். வீட்டுக்காரருடன் வாதம் செய்ய நேர்ந்ததில் நெடுஞ்சினங்'' கொண்டு அப்படியே நிமிர்ந்து விட்டானும் அந்த உயர்திருவாளன், 'சிறிது குடிசை' என்று குறுகியிராமல்.

இந்த நிலைமை அனுமன் கொண்ட நெடுஞ் சினத்திலும் ஏற்படுகிறதாம்:

> 'குறிது வான்!' என்று
> குறைந்திலன் நெடுஞ்சினம்
> கொண்டான்.

[குறிது வான்-வானம் உய போதாது.]

இனி இந்த விசுவரூபத்திற்கு ஓர் உபமானமும் வருகிறது கம்பனுக்கே உரிய பாணியில்:

> மறியும் வெண்திரை
> மாகடல் உலகெலாம்
> வழங்கிச்
> சிறிய தாய்சொன்ன
> திருமொழி சென்னியில்
> சூடி,
> நெறியில் நின்றதன்
> நாயகன் புகழென
> நிமிர்ந்தான்.

[மறியும்-கீழ் மேலாகிப் புரளும். வெண்திரை-வெண்மையான அலைகள்.]

அனுமனுடைய ஸ்தூல பலத்தோடு கூடிய விசுவ ரூபத்திற்குத் தலைவனது தியாக சொரூபத்தை உவமிக்கும் நயம் உய்த்துணரத் தக்கது.

அனுமனுடைய தன்னம்பிக்கையை ஓங்கி மண்டையில் அடித்து வீழ்த்தி விட அல்லவா திட்டமிட்டான் இந்திரஜித்து? அந்த நம்பிக்கை இப்போது வானுற ஓங்கி நிமிர்ந்து விசுவரூபம் எடுத்திருக்கிறதென்றால், அதற்கு ராம பக்தியும் ராமன் ஒழுகிக் காட்டும் தியாக நெறியாகிய திருநெறியும் தானே துணையாக இருக்க வேண்டும்?

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

50. அறக்கண்ணீரும், மறக்கண்ணீரும்

அனுமன் கொண்ட பெருவடிவத்தைத் திடீரென்று கண்டதும் இந்திரஜித்துக்கு ஒரே வியப்பாகிறது. 'மயக்கம் போட்டு விழுந்து விடுவோமோ?' என்று கூடத் தோன்றுகிறது. 'மயங்கினனுமென வியந்தான்' என்று கவிஞன் கூறுகிறான்.

மூன்று லோகத்திற்கும் திசை பத்துக்கும் ஏக நாதனுக இருந்த இந்திரனைப் பிடித்துக் கட்டிய மேகநாதனுக்கு அந்தப் பழைய பெயர் மறைந்து இந்திரஜித்து என்ற பெயரே நிலைத்து விடுகிறது. அந்தப் பழைய பெயர்தான் சாதாரண இடுகுறிப் பெயரா?

ராவணேசுவரனுக் கென்று வந்து பிறந்த இம் மைந்தனுக்கு என்ன பெயரிடலாமென்று ஆலோசனை நடந்து தானே இருக்க வேண்டும்? ஆலோசனைகளுக் கெல்லாம் குழந்தையே முற்றுப் புள்ளி வைத்து விட்டதாம்.

திடீரென்று இடிக்குரல், — குழந்தை வாய்விட்டு அழுத குரல்தான்! இடியின் நாதமாக, மேக கர்ஜனையாகக் கேட்டதால், பிள்ளையாண்டானுக்கு மேகநாதன் என்றே பெயரிட்டு மகிழ்ந்தானும் லங்கேசுவரன்.

அப்பேர்ப்பட்ட மேகநாதனும் இந்த விசுவரூப அனுமனைப் பார்த்ததும் மயக்கம் போட்டு விழப் பார்த்துச் சமாளித்துக் கொள்கிறானும்:

மேக நாதனும்
மயங்கின னுமென்
வியந்தான்.

பெரும் போராட்டம்

விசுவரூப அனுமனைப் பார்த்துத் தானு? கடலைப் பார்த்தோம் என்று சொல்லுகிறோமே, ஏதோ ஒரு பகுதியைப் பார்த்துவிட்டு; இப்படியே தான் இந்திரஜித்து அனுமனை இப்போது பார்த்ததும் :

பாகம் அல்லது
கண்டிலன் அனுமனைப்
பார்த்தான்.

எனினும் அந்த விசுவரூப வளர்ச்சியைத் தன் அம்புகளுக்கு ஒரு பிரமாண்ட இலக்காக்கிக் கொள்ளத் துணிந்து இந்திரஜித்து கொடிய அம்புகளை வீசத் தொடங்குகிறான். பல கோணங்களி லிருந்து அம்புகள் போடுவதற்கு வசதியாகச் சாரதி தேரைச் செலுத்துகிறான். பேய்கள்பூட்டிய அந்தத் தேரும் அப்படியும் இப்படியுமாகத் திரும்பித் திரும்பி இந்திரஜித்துக்கு வசதி அளித்த வண்ணமா யிருக்கிறது.

விசுவரூப அனுமன் இந்த உபத்திரவத்தை எப்படிச் சமாளிக்கிறான் பாருங்கள்! இந்த நீண்ட வீரன் தன் நீண்ட பெரிய கைகளை எதிரே நீட்டி நீட்டி, அம்புகளெல்லாம் திரும்பி எதிரி மேலே போய் விழுமாறு செய்கிறான். செய்துவிட்டுத் தேரை நோக்கி ஓர் அறை கொடுக்கிறான். 'பேய் அடிக்கப் பிள்ளை பிழைக்குமா?' என்பர். ஆனல் இங்கே அனுமன் அறையப் பேய், சாரதி, தேர் எல்லாம் (இந்திரஜித்தைத் தவிர) அந்த ஒரே அறையில் ஸமாப்தி!

தேர் இழந்த இந்திரஜித்துக்கு அருகில் வேறொரு தேரைக்கொண்டு வருகிறான் வேறொரு தேர்ப்பாகன். இது உடன் வந்திருக்கும் சேமத்தேர்களில் ஒன்று. அது பேய்கள் பூட்டிய தேர் என்ருல் 'இதில் ஊழிக்காற்றையே பூட்டி வைத்திருக்கிறதோ, பல குதிரை வடிவங்களில்!' எனத் தோன்றுகிறது.

இந்தத் தேர்மேல் பாய்ந்து ஏறிக் கொள்கிறான் இந்திரஜித்து.

பல சக்கராயுதங்கள் ஏக காலத்தில் பறந்து வருகின்றனவோ எனத் தோன்றும்படி அம்புகளை முடுக்கி அனுமனின் மேனியை மூடி மறைத்து விடுகிறான் இந்திரஜித்து. இதனால், அனுமனது விசுவரூபம் இப்போது போர் புரிய வசதியாக இருக்க வேண்டிய அளவிற்குக் குறுகி வருகிறதென்று கருதலாம்.

இந்த அம்புகளையெல்லாம் உதறிக் கொண்டே இந்திரஜித்தின் தேர்மேல் அனுமன் எழும்பிப் பாய்ந்து குதிக்கிறான். இதற்கு முந்திய போர்களில் கையாண்ட முறைதான். ஆனால் இங்கே அட்சகுமாரனல்ல, சம்புமாலி யல்ல; இந்திரஜித்தல்லவா?

தேரில் குதித்து, உலகெல்லாம் கலக்கி வென்ற அந்த வில்லையும் முறித்தெறிந்து விடுகிறான். ஆனால்,

முறிந்த வில்லின்வல்–
லோசைபோய் முடிவதன்
முன்னர்,—

இந்திரஜித்து, அன்று தோற்ற இந்திரன் பாத காணிக்கையாக வைத்த அந்த வில்லை எடுத்துக் கொள்கிறான்.

இந்த வில்லிலிருந்து ஒரே தொடுப்பில் நூறு நூறு அம்புகள் கிளம்புகின்றன. அனுமன் மேனியில் பல புண்கள். சிறிது பொழுது தளர்ந்திருக்கிறான்.

இந்திரஜித்தின் வில் முறிந்தது கண்டு விண்ணவர் கொண்ட ஆரவார மகிழ்ச்சி, விரைவில் துன்பமும் அறிவுக் கலக்கமாகவும் பரிணமிக்கிறது. அனுமன் அயர்ச்சி தீர்ந்து ஒரு மரத்தைச் சுற்றி வீசி இந்திரஜித்தின் முடி சூடிய தலைமேல் மூளை கலங்கப் புடைக்கிறான்:

போர்த்த
பொன்னெடு
மணிமுடித்
தலையிடைப்
புடைத்தான்,

[போர்த்த– தரித்த.]

இப்போது இந்திரஜித்துக்குக் கொஞ்சம் அயர்ச்சி. கிரீடத்திலுள்ள செந்நிற மாணிக்கங்களின் நீண்ட ஒளித் தொகுதிகள் கீழ் நோக்கி விழுவது போல இரத்த தாரை வழிய, இந்திரஜித்தின் உடம்பும் நடுங்குகிறது.

தோல்வி போல வந்த வெற்றி

தலையில் அடிபட்டுத் தளர்ந்த இந்திரஜித்தும் விரைவில் போதம் உற்று நெறு நெறு வென்று பற்களைக் கடிக்கிறான்.

குன்று போல்நெடு
மாருதி ஆகமும்
குலுங்க,
ஒன்று போல்வன
ஆயிரம் பகழிகோத்(து)
உய்த்தான்.

[மாருதி ஆகமும்– அனுமனுடைய உடம்பும். பகழி–அம்புகள். உய்த்தான்–தொடுத்தான்.]

இப்போது விசுவரூபம் குன்றுபோலக் குறுகிப் போரிடுகிறது என்பது தெளிவு. இந்த வீரக் குன்று கனல் கக்குவது போலக் கோபித்து ராம பாணத்தைக் காட்டிலும் வேகமாய்ப் பாய்ந்து இந்திரஜித்தைத் தேரோடும் தூக்கியெறிந்து ஆரவாரம் செய்கிறது.

வானத்தில் நெடுந்தூரம் சென்று தேர் கீழே விழுகிறது. இந்திரஜித்தோ தான் தரையில் விழுந்தது பிறருக்குத் தெரியாதபடி அவ்வளவு விரைவாக வானத்தில் எழுகின்றான். அப்போது



அனுமன் கீழே யிருந்த சேமத் தேர்களை யெல்லாம் உதைத்துச் சிதைத்து விடு கிறான். உதை யென்றால், குன்று கால் நீட்டி உதைப்பது போலல்லவா காண் கிறது?

இந்திரஜித்துக்கோ வேறு தேரில்லை. எதிர் நிற்கவும் வலிமை இல்லையாம். என்றாலும் தோல்வியையும் வெற்றி யாக்கிக் கொள்ள வல்லது இந்திரஜித் தின் சூழ்ச்சித்திறன்.

ஏறு தேரிலன்,
எதிர்நிற்கும் உரனிலன்,
எரியிற்
சீறு வெஞ்சினம்
திருகுகின்
றான்திரி—
வானும்,
வேறு செய்வதோர்
வினைபிறி(து) இன்மையின்,
விரிஞ்சன்
மாறி லாப்பெரும்
படைக்கலம் தொடுப்பதே
மதித்தான்.

[எரியின் சீறு வெஞ்சினம் – நெருப்பு எரிவது போலச் சீறி வருகின்ற கொடிய கோபத்தால். திருகுகின்றான் திரி வானும் – வானத்தில் திருகித் திரிகின்ற வனுமாகிய இந்திரஜித்தும். வினை – செயல். பிறிது இன்மையின் – வேறொன் றும் இல்லாமையினால்.மாறிலாப்பெரும் படைக் கலம் – ஒப்பில்லாத பெருமையுள்ள பிரமாஸ்திரத்தை.]



பிரமாஸ்திரத் தைப் பூஜித்துக் கையிற் கொண்டு வில் லில் தொடுத்து அனுமனது வீரத் தோள் களை இலக்காக்கி எய்துவிடுகிறான் :

மந்து ளங்கிட,
மாதிரம் துளங்கிட,
மதிதோய்
விந்து ளங்கிட,
மேருவும் துளங்கிட
விட்டான்.

[துளங்கிட – நடுங்கிட. மாதிரம் – திசைகள். மதி தோய்–சந்திரன் பொருந் திய. விண்–மேலுலகம்.]

வீரவாதம் செய்தபோது,
தோளுக்(கு)
எல்லைஒன்(று)
இல்லையென்(று)
அனுமனும்
சொன்னான்.

என்று வந்திருப்பதை நினைப்பூட்டுகிறோம். அந்தத் தோள்களையே கட்டி விடு கிறான் இந்திரஜித்து பிர மாஸ்திரத்தால். அப்படி யானால், 'அரக்கர் கொடுந்

தொழிலாகிய ஹிம்ஸை நெறிக்கு எல்லை கொண்டு வந்தேன்' என்ற அனுமன் வாக்கும் பொய்த்ததா ?

இந்த ஹிம்ஸை நெறியின் வெற்றி தாற்காலிகம் தானே ? பிரமாஸ்திரம் ஒரு மகா நாக வடிவம் கொண்டு அந்தப் பாம்பின் ஒளிவடிவு தோள் மேல் விளங்கிக் காணுமாறு அழுந்தக் கட்டி விடுகிறதாம். அனுமன் சாய்ந்து விழுகிறான் :

திண்ணென் யாக்கையைத்
திசைமுகன் படைசென்று
திருக,
அண்ணல் மாருதி,
அன்றுதன் பின்சென்ற
அறத்தின்
கண்ணி னீரொடும்,
கனகதோ ரணத்தொடும்,
கடைநாள்
தண்ணென் மாமதி
கோளொடும் சாய்ந்தெனச்
சாய்ந்தான்.

[திண்ணென் யாக்கையை - அனுமனுடைய உறுதியான உடம்பை. திசைமுகன்படை—பிரமாஸ்திரம். திருக—சுற்றிக் கட்டவே. அண்ணல் மாருதி-பெரியோனுகிய அனுமனும். கனக தோரணத்தொடும்—எந்த அசோக வனத் தோரண வாசல்மீது நின்று அரக்கர்களைப் பொருது அழித்தானே, அதே பொன்மயமான வெளி வாசலில். கடைநாள்—கடைசிக் காலமாகிய கற்பாந்த காலத்தில். தண்ணென் மாமதி - குளிர்ந்த பூர்ண சந்திர மண்டலம். கோளொடும் சாய்ந்தென—தன் ஒளியோடு பூமியில் சாய்ந்து விழுந்தது போல.]

அனுமன் சாய்ந்து விழுந்ததும், இவனை நம்பிப் பின்னே வந்து கொண்டிருந்த தருமமே கண்ணீர் வடிக்கிறதாம். அந்தக் கண்ணீரோடும் அந்தத் தோரண வாசலில் அப்படியே விழுந்து கிடக்கிறான் ராமதூதன் என்று காட்டுவது ஓர் அற்புதமான கவிச்சித்திரம். மனம் கலந்து இப்பாட்டை ஓத ஓத வாசகர்களின் கண்ணீரோடும் சாய்கிறான் அனுமன் எனவும் தோன்றும் !

பிரமாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டுக் கண் மூடிக் கிடக்கிறான் அனுமன். இவன் வலி ஓய்ந்தது என்று இந்திரஜித்து வந்து நெருங்குகிறான். அரிதில் உயிர் தப்பி ஓடி ஒளித்திருந்த அரக்கர்களெல்லாம் இப்போது இவனைச் சூழ்ந்து கொண்டு அதட்டுகிறார்கள். அனுமன் உடம்பைச் சூழ்ந்து கட்டியிருக்கும் அந்தப் பாம்பின் வாலையும் பிடித்திழுத்து அனுமன் உடம்பை மேலும் இறுக்கி இழுக்கிறார்கள்.

ராவண மகாராஜ்யத்தின் வீரப் பெருஞ்சரிதையிலும் இத்தகைய பெருமகிழ்ச்சி அடிக்கடி ஏற்படவில்லை. இதற்கு முன்னே ஒரு தடவை தான் ஏற்பட்டிருந்தது. அதாவது, இந்திரனை இந்திரஜித்து கட்டிப் பிடித்து வந்த அந்தக் காலத்திலே தான்.

அந்த வெற்றியே அரக்க-ஸாம்ராஜ்யத்தின் அஸ்திவாரக் கல்லாயிற்று. அப்படியே இந்த வெற்றியும் தங்களுக்கும் தங்களுடைய மகாராஜ்யத்திற்கும் சக்ரவர்த்திக்கும் விசேஷ அதிர்ஷ்டத்தைக் கொடுக்கக்கூடும் என்று அரக்கர்கள் நம்புகிறார்கள்.

அறத்தின் கண்ணீரோடு மட்டுமா அனுமன் விழுந்திருக்கிறான் ? அரக்கர்களின் ஆனந்தக் கண்ணீரோடும் தான் :

வந்தி ரைத்தனர்
மைந்தரும் மகளிரும்
மழைபோல் ;
அந்த ரத்தினும்
விசும்பினும் திசைதொறும்
ஆர்ப்பார் ;
முந்தி உற்றதோர்
உவகைக்கோர் கரையிலை ;
மொழியின்,
இந்தி ரன்பிணிப்
புண்டநாள் ஒத்த(து)அவ்
இலங்கை.

[இரைத்தனர் - இரைச்சல் போட்டார்கள். அந்தரம் - வானம். விசும்பு - (இங்கே) மேலுலகம், ஆர்ப்பார் - ஆரவாரிப்பார்கள். பிணிப்புண்ட - கட்டுப்பட்ட.]

இந்தப் போரைத்தான் கவி எவ்வளவு ரஸமாக வருணித்திருக்கிறான் !

இந்தப் பகுதியில் மருந்துக்குக் கூடச் செருகு கவி காணப்படவில்லையென்றே தோன்றுகிறது. 'தாடகை வதை, கரதூடணர் வதை ஆகிய இடங்களில் போர் கூறும் பாடல்கள் அருமையாக அமைந்துள்ளன' என்று கூறுவது பொருத்தமானதே. ஆனால் இந்தப் போர்கூறும் பாடல்களும் அருமையாகவே அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை.